Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 13
குவிப்பு - 06
பக்கங்கள்- 12
விலை ரூபா 30.00
ஜூன் 2010
(ISSN 1800-2641)

"Registered in the Department of Posts of Sri Lanka under No. "QD/109/News/2010"

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ Fax No - 023-2251161, E. Mail : sdmlogu@gmail.com, benoalexander@yahoo.com

# 44வது உலக தொடர்பாடல் தினம்

## "டிஜிரல் உலகில் குருக்களும் மேய்ப்புப்பணியும்"

## திருத்தந்தையின் தொடர்பாடல் தினச் செய்தி

44வது உலக தொடர்பாடல் தினம் கடந்த 16.05.2010 அன்று ஞாயிற்றுக் கிழமை உலகெங்கும் கொண்டாடப்பட்டது. இத்தொடர்பாடல் தினத்திற்கான செய்தியை திருத்தந்தை அவர்கள் வழங்கியிருந்தார்.



அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

"டிஜிரல் உலகில் குருக்களும், மேய்ப்புப்பணியும்: இறைவாக்குப்பணிக்கு நவீன ஊடகங்கள்" எனும் இவ்வாண்டின் உலக தொடர்பாடல் தின கருப்பொருளானது இவ்வருட குருக்கள் ஆண்டு கொண்டாட்டங்களுடன் பின்னிப்பிணைந்துள்ளது. இத்தலைப்பானது டிஜிரல் தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றியும் குருக்கள் தமது இறைவாக்குப்பணியை எடுத்துச்செல்வதற்கான புதிய வழி முறைகளை கண்டுபிடிப்பதற்கு டிஜிரல் தொடர்பாடலிலே உணர்வு பூர்வமான மேய்ப்புத்தளம் பற்றியும் டிஜிரல் தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றியும் கவனம் செலுத்துகின்றது. திருச்சபை சமூகமானது தொடர்பாடல்களை மேம்படுத்துவதற்காக எப்போதுமே நவீன ஊடகங்களை பயன்படுத்தியுள்ளது. அண்மைக்காலத்தில் இத்தகைய ஊடகத்தின் திடீர் வளர்ச்சியும் அதன் பெருமளவு சமூகத்தாக்கமும் பயனுள்ள மேய்ப்புப்பணிக்கான அதன் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

மனுவுரு எடுத்த வார்த்தையானவரான இயேசு கிறிஸ்துவைப்பற்றி அறிவிப்பதும் அவருடைய வாழ்வு தரும் அருட்சாதனங்களை வழங்குவதுமே எல்லா குருக்களினதும் கடமையாகும். வார்த்தையானவரினால் அழைக்கப்பட்டதும் உருவாக்கப்பட்டதுமான திருச்சபையானது கடவுள் எல்லா மனிதரோடும் உருவாக்கும் தொடர்பாடலின் அடையாளமும் கருவியுமாக இருக்கிறது. அதே வேளையில் ஒவ்வொரு குருவானவரும் இந்த தொடர்பாடலை கிறிஸ்துவிலும் கிறிஸ்துவோடும் கட்டியெழுப்புவதற்கு அழைக்கப்படுகின்றார்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)


### மன்னார் பேராலய தியான மண்டபத்தில் நிகழ்ந்த

## பெந்தகோஸ்தே திருவிழிப்பு ஆராதனை

மன்னார் மறைமாவட்ட வழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. கிறிஸ்து நாயகம் அவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட பெந்தகோஸ்தே திருவிழிப்பு ஆராதனை கடந்த 22ம் திகதி சனிக்கிழமை மாலை 8.00மணி தொடக்கம் அதிகாலை 6.00மணிவரை மன்னார் புனித செபஸ்தியார் பேராலய தியான மண்டபத்தில் இடம்பெற்றது. இத்திருவிழிப்பு ஆராதனையில் படைப்பின் தொடக்கம் முதல் திருச்சபையின் தோற்றம், வளர்ச்சி, சமகால திருச்சபை இவற்றில் தூய ஆவியானவரின் செயலாற்றல் பற்றி அருட்பணியாளர்கள் தவராஜா, நியூட்டன், கிறிஸ்துநாயகம், பெனோ அலெக்சாண்டர், கிறிஸ்ரி ரூபன், டக்ளஸ் ஆகியோரும் பொதுநிலைப் பணியாளர்கள் கீதபொன்கலம், அன்ரனி, ஞானப்பிரகாசம் ஆகியோரும் மறையுரைகளும் ஆன்மீக உரைகளும் வழங்கியிருந்தனர். அதிகாலை வேளையிலே நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு அருளுரை, ஆராதனைகளை அருட்பணியாளர்கள் யூட் குருஸ், றொக்சன் குருஸ் ஆகியோர் ஆற்றியிருந்தனர். அதன்பின்னர் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அவர்களால் நற்கருணை ஆசீர் வழங்கப்பட்டு அவர் தலைமையில் தூய ஆவியானவர் திருவிழிப்பு கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான இறைமக்கள் இவ்வழிபாட்டில் கலந்து செபித்து மனநிறைவடைந்தனர்.







### கற்கிடந்தகுளம் புனித சூசையப்பர் ஆலய

## நேர்ந்தளிப்பு விழா

கற்கிடந்தகுளப்பங்கின் புனித சூசையப்பர் ஆலயத்திருவிழாவும் புனரமைக்கப்பட்ட புதிய ஆலயத்தின் நேர்ந்தளிப்பு விழாவும் கடந்த 01.05.2010 சனிக்கிழமை மே தினமன்று நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களும் வருகை தந்திருந்த குருக்கள் பிரமுகர்களும் 'பாண்ட்' இசைக்கருவி முழங்க வரவேற்கப்பட்டனர். ஆயர் அவர்களினால் ஆலயமானது ஆசீர்வதிக்கப்பட்டு அவர் தலைமையில் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

தொழிலாளரின் பாதுகாவலராம் புனித சூசையப்பரின் முன்மாதிரிகையையும் உழைப்பின் உன்னதத்தையும் ஆயர் அவர்கள் தனது மறையுரையில் இறைவார்த்தையின் ஒளியில் எடுத்துரைத்தார். திருப்பலி நிறைவில் திருச்சுரூப பவனியும் ஆசீரும் இடம்பெற்றது. தொழிற்கருவிகளும் ஆசீர்வதிக்கப்பட்டன.

கற்கிடந்தகுளம் கிராம மக்களின் பத்து வருட பங்களிப்பில் முன்னைய பங்குத்தந்தையர்கள் ஸ்ரீபன் ராஜா, டெஸ்மன் குலாஸ் இவர்களின் காலப்பகுதிகளில் ஆலய புனர் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு தற்போதைய பங்குத்தந்தை அருட்பணி. சீமான் மரியதாசன் அவர்களின் அயரா முயற்சியால் பூர்த்தி செய்யப்பட்டு ஆலயம் அழகுற காட்சி தருகின்றது. ஆலய விழாவையும் நேர்ந்தளிப்பு வைபவத்தையும் பங்குத்தந்தையும் ஆலய மக்களும் சிறப்புற ஒழுங்கு செய்து நடாத்தியிருந்தனர்.





## ஒரு வருட இரங்கல் நினைவில் இதய அஞ்சலி

### வன்னி மண்ணில் வலி சுமந்து உயிரிழந்த இறைபணியாளர் அருட்பணி சரத்ஜீவன்

கடும்சமர் வன்னி வாழ்
உயிர், உடல், உடைமைகளை
உருக்குலைத்து கோரதாண்டவமாடிய
கொடூர பொழுதுகளில்
இறுதி வரை உடனிருந்த
இறைபணியாளர் சரத்ஜீவன்.

அவதியுற்று அல்லல்பட்டு
அநாதரவான மக்களுக்கு
இயேசு சபை அகதிபணியால்
ஆறுதல் அளித்த
அரும்பணியாளர்
அருட்பணி. சரத்ஜீவன்



எஞ்சியவர் எல்லாம் வெளியேறிய இறுதி கணத்தில் ஏக்கங்கள் எல்லாம் தாக்கங்களாக மிதமிஞ்சிய அயர்வில் நெஞ்சு வலியால் கண்மூடிப் போனார் இந்த அன்புப்பணியாளர். அன்னார் ஆண்டவர் அடியில் அமைதியாக இளைப்பாறுவாராக!

## ஓராண்டு இரங்கல் நினைவில்

### இறைபதம் இளைப்பாற இறைஞ்சி அருட்பணி. சீமாம்பிள்ளை நோபேட் அடிகள்

சிறியோரையும் இளையோரையும்
வளர்ந்தோரையும் பெரியோரையும்
ஒட்டு மொத்த இறைமக்களையும் - தன்
வசீகரத்தால் வளைத்துப் போட்ட
நோபட் அடிகள் அமரத்துவமாகி
ஓராண்டு ஓடி விட்டது.

அமைதியின் தேவன் - தன்
அடைக்கல நகரில்
அமரத்துவமடைந்த – எம்
நோபட் அடிகளாருக்கு
நித்திய ஈடேற்றத்தை நல்கிட
எம் உள்ளத்து வேண்டுதல்கள்
இறைவன்பால்....



அமரர். அருட்பணி. சீ.நோபட் அடிகளாரின் இறப்பின் ஓராண்டு நிறைவு இரங்கல் திருப்பலி மன்னார் ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக புனித செபஸ்ரியார் பேராலயத்தில் 21.06.2010 திங்கட் கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

# மன்னா மனப்பொழிவு

*ஆசிரியர் குழு பகர்வு*

**மனிதத்தை வாழ வைக்கும் புதிய ஊடகமாக.........**

"கடவுள் அண்மையில் உள்ளார் என்பதையும், கிறிஸ்துவில் நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் சொந்தம்" என்பதையும் காட்டுவதாக உலகில் எமது மறை போதகம் விளங்க வேண்டும்" – திருத்தந்தை.

16.05.2010 அன்று 44வது உலக தொடர்பாடல் தினச் செய்தியிலே மேற்குறிப்பிட்ட கருத்தை எமது திருத்தந்தை நினைவூட்டுகின்றார். குருக்களுக்கான இவ்வாண்டிலே "கடவுளின் மனிதன் எனப்படுபவர் குருவானவர்" என்று கூறி இன்று குருக்கள் தங்களது மேய்ப்புப் பணியிலே புதிய ஊடகமாக செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். குருக்கள் மாத்திரமன்றி, ஊடக பணியில் ஈடுபடும் ஒவ்வொருவருமே இறைவார்த்தை-யாம் இயேசுக் கிறிஸ்துவையும், அருட்சாதனங்களின் எல்லையற்ற கடவுளின் அன்பின் தொடர்பாடலையும் அறிவிப்பதே பிரதான பணியாகுமென கோடிட்டுக் காட்டுகின்றார். இயேசுவில், இயேசுவுடன் உண்மையான தோழமையை மனிதத்தில் கட்டியெழுப்பி இறைவார்த்தை பணியை குருக்கள் சிறப்பாக இந்த டிஜிரல் உலகில் புதிய தொழிநுட்பங்கள் ஊடாக பரப்ப வேண்டும் என்கிறார். இவ்வாறு கடவுளின் பிரசன்னத்தை உணரச் செய்யவும், நம்பிக்கையிலும், எதிர்பார்ப்பிலும் வளரச் செய்யவும், முழுமனித அபிவிருத்தியை வளர்த்தெடுக்கவும், மக்களை வழிநடத்த வேண்டும் என்கிறார்.

"Communication is the heart of the Church". இன்று உலகெங்கும் "தொடர்பாடல்" என்பது ஒரு இதயமாகவே இருக்கிறது. தொடர்பாடலின் வளர்ச்சியை அறியாதவர் இக் காலத்தை சேராதவர் என்றே கருதப்படுவார். தொடர்பாடல், தொடர்பு சாதனங்கள் கடவுளது கொடையாக இருக்கின்ற போதும் அது இன்று எமது மண்ணிலே அதிகம் அறியப்படாத ஒன்றாக இருப்பதும், பெரும் சவாலாக இருப்பதும் நாம் அறிந்ததே.

கடந்து போன கசப்பான நாட்களில் உண்மையை சொல்வதற்கான தொடர்-பாடலின் அழைப்பில் சாட்சியமானவர்கள் பலரை நாம் அறிவோம். உண்மையான தொடர்பாடல் இன்மையால் தொடர்பு-கொள்ள முடியாததால் நாம் சந்தித்த இழப்புகள், சந்தித்த துயரங்கள், மரணங்கள் மறக்கவே முடியாது நமது வரலாற்றில்.

எனவே தான் இன்று நமக்கு "Communication and Planning" – தொடர்பாடலும், திட்டமிடலும் எமது மக்களை கட்டியெழுப்ப, அவர்களை நம்பிக்கையின் பாதையிலே இட்டுச் செல்ல மிக அவசியமானது. "மொழி குழப்பம்" எழுகின்றபோது (தொ.நூல் 4:1-16) வேதத்திலே மனிதகுலம் சிதைந்து போகிறது. நாம் இன்று தொடர்பு சாதன உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகில் எந்த முனையில் இருக்கும் மனிதனுடனும் எளிதாக தொடர்புகொள்ள வழிவகுத்த தொடர்பாடல் தன்னருகே அமர்ந்திருப்பவர்களிடம் மனிதப் பாங்குடன் வாழக் கற்றுத் தரவில்லை. இங்கு தொலை தூரம் எளிதாகி போனது, அருகாமை தொலைந்து போனது. அத்தோடு மனித மாண்பும் மறைந்து போனது. நம்மை, நம் மக்களை கட்டியெழுப்ப புதிய ஊடகமாவோம். நாளைய விடியல் உண்மை விடுதலையாக ஒவ்வொருவர்க்கும் மலர உறவை கட்டியெழுப்புவோம். அருகில் உள்ள மனிதத்தை வாழவைப்போம். எமது கரங்களிலும், இதயங்களிலும் விவிலியத்தை ஏந்தியவர்களாக இறைவார்த்தைக்கு இட்டுச் செல்லும் வழிகளை ஆயத்தப்படுத்துவதில் தொடர்ந்து பயணிக்க அழைப்பு விடுக்கும் நம் திருத்தந்தையோடு இணைந்து செபித்து "சுதந்திரத்தின் இதயம் மனிதன்" என்பதை உணர்ந்து கொள்வோம்.

# வாசகர் எண்ணங்கள்

## புத்தூக்கம் அளித்தாய்!

மன்னா எனும் நாமமுள்ள
உன்னை சுந்தரமாய் வடிவமைத்திட
பன்முக ஆற்றல் கொண்டோருக்கு
முன்னிடம் கொடுக்கும் களமானாய்!
வாசிக்கும் நெஞ்சங்கள் யாவும் யோசித்து
தாமும் எழுதியே பூசித்து
உன்னை வாழ்த்தி ஆசித்து நிற்க தூண்டினாய்!
ஏக்கங்களோடும் பல எதிர்பார்ப்போடும்
தாக்கங்களோடும் வாழ்ந்த நான் - உன்
ஆக்கங்களால் புதுவழி கண்டு
ஊக்கம் அடைந்திடச் செய்தாய்!
சிறகு விரித்து எம்மவரோடு உறவு வளர்த்த கலையே
சிறந்து மேலும் தொடர்ந்து
பறந்து உயர்வெய்திட வாழ்த்துகிறேன்.

அ. மேரி கொண்செப்ரா,
மடுக்கோவில், மடு.

# மன்னார் தலத்திருச்சபைக்கு யாழ். மறைமாவட்ட குருக்கள் அவை வரைந்த நன்றி மடல்

யாழ் மறைமாவட்ட குருக்கள் அவை
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்
15 சித்திரை 2010

அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய மன்னார் ஆயர் இராயப்பு யோசப் அவர்கள், குருமுதல்வர், வாழ்வுதய இயக்குனர், உதவி இயக்குனர், பங்குத் தந்தையர்கள், துறவிகள், அருட் சகோதரிகள், மற்றும் அனைத்துப் பங்குகளையும் சேர்ந்த இறைமக்கள் - முதற்கண் உங்கள் எல்லாருக்கும் கிறிஸ்து இயேசுவில் எங்கள் அன்பான வாழ்த்துக்கள்.

**விடயம்: நன்றி நவிலலுக்கான தீர்மானம்**

யாழ். மறைமாவட்ட குருக்கள் அவையின் 11.03.2010 திகதி கூட்டத்தில் மேற்படி நன்றி நவிலலுக்கான தீர்மானம் ஏகோபித்தவிதமாக எடுக்கப்பட்டது. அதற்கமைய எங்கள் இதயத்தின் நன்றி உணர்வை உங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகிறோம். கடந்த கால கோர யுத்தத்தின் போதும், அதன் பின்பும், வன்னி பிராந்தியத்திலே இருந்து மூன்று இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து உண்ண உணவின்றி, உடுக்க உடையுமின்றி, உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் காயமுற்றவர்களாக, தகர்ந்து உடைக்கப்பட்ட மனங்களோடும், மிகவும் சோர்ந்து களைப்புற்ற உடல்களோடும் உங்கள் மறை மாவட்டத்தின் மன்னார், வவுனியா பகுதிகளுக்கு புகலிடம் தேடி வந்து சேர்ந்தனர். அவ்வேளையில் உங்கள் எல்லோருடைய கனிவான பார்வை, மிகவும் ஆறுதல் கொடுத்த வார்த்தைகள், தேவையான உதவிகளை செய்த அன்புக்கரங்கள், நாளாந்தம் உங்களது பரந்துபட்ட பங்குகள், கிராமங்களில் இருந்து உங்களால் ஒழுங்கு செய்யப்பட்டு கொண்டு வந்து பகிரப்பட்ட இலட்சக்கணக்கான உணவு பொதிகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய விநியோகிக்கப்பட்ட உங்கள் பொருட்கள் இவை யாவற்றையும் மிகுந்த நன்றி பெருக்கோடு நினைவு கூருகின்றோம்.

**இடப்பெயர்வுகளின் போது மன்னார் மறைமாவட்ட குருக்கள், துறவியர்**

கொடூரமான போர் நடைபெற்ற காலகட்டத்தில் எமது மறைமாவட்டப் பகுதிகளுக்குள் இடம்பெயர்ந்து வந்த மன்னார் மக்களோடும், எமது மறைமாவட்டத்தின் இடம்பெயர்ந்த மக்களோடும், குருக்களோடும், துறவிகளோடும் சேர்ந்து வாழ்ந்து, இடப்பெயர்வின் அனைத்து துன்பங்களையும் பெரும் தியாகத்தோடும், அன்போடும், மகிழ்ச்சியோடும் ஏற்றுக்கொண்ட மன்னார் மறைமாவட்ட குருக்களையும், துறவிகளையும், பெருமையோடும், நன்றியோடும் நினைவுகூருகின்றோம். போர் நடைபெற்ற காலப் பகுதியிலும், போருக்குப் பின்னரான காலப்பகுதியிலும் இடம்பெயர்ந்த எம்மக்களின் யதார்த்த வாழ்நிலைகளில் நீங்கள் செய்த உதவிகளை நாங்கள் மறந்துவிட முடியாது. பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் தங்களுக்குரிய அன்றாட பணிகளுக்கு மத்தியிலும், தஞ்சமடைந்திருந்த எம் மக்களிற்கு பலிப்பூசைகளை பெரும் சிரமங்களுக்கிடையிலும் நிறைவேற்றி, இறைவார்த்தையின் ஒளியில் அவர்களை தேற்றி, திருவிருந்தினால் ஊட்டம் பெறவைத்து, பெரும் சுமைகளை தாங்கி வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர்நோக்க உதவியதை நாங்கள் அன்போடு நினைவுகூருகின்றோம். சிறப்பாக செட்டிகுளம், வவுனியா, பம்பைமடு, கோமரசன்குளம், இலுப்பைக்குளம் பங்குகளின் குரவர்களையும், அருட் சகோதரிகளையும், பங்கு மக்களையும், அவர்களின் சேவைகளையும் நாம் ஒரு பொழுதும் மறக்க முடியாது.

**சிங்கள, வெளிநாட்டு சகோதரிகள்**

தமிழ் மொழி போதியளவு தெரியாவிட்டாலும், இறைவன் கொடுத்த அன்பு இதயங்களோடும், அழகிய புன்சிரிப்போடும், பெரும் சிரமங்கள் மத்தியில் உங்களோடு சேர்ந்து எங்களுக்கு ஆறுதல் தரவென்று வந்த சிங்கள, வெளிநாட்டு சகோதரிகளையும் விசேட விதமாக நன்றியோடு நினைவு கூறுகின்றோம். மிகுந்த துணிவோடும், கிறிஸ்தவ மதிப்பீடுகளுடனும் முடிவுகளை எடுத்து அருட்சகோதரிகளை தொடர்ச்சியாக எம் மக்களுக்கு பணிபுரிய அனுப்பி வைத்த துறவற சபைகளின் பொறுப்பதிகாரிகளுக்கு சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றோம். இப்படி பணிபுரிய முன் வந்தவர்களை உங்களது மறைமாவட்டத்தின் பல நிலையங்களிலும் வரவேற்று, விருந்தோம்பி, தங்கியிருந்து பணி செய்ய நீங்கள் எடுத்த எல்லா முயற்சிகளுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

**வைத்திய துறையினர்**

உங்கள் மறைமாவட்டத்தின் பல்வேறு வைத்தியசாலைகளுக்கு நொறுக்கப்பட்ட உடல்களோடும், சிதைந்த மனங்களோடும் வந்து சேர்ந்த பல்லாயிரக்கணக்கான நோயாளிகளை மிகுந்த கரிசனையோடும், அன்போடும், தியாக உள்ளத்தோடும் வரவேற்று இலைமறை காய்களாக செயற்பட்டு, பல மாதங்கள் பராமரித்து சுகப்படுத்திய வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், மற்றும் பணியாளர்கள், தொண்டர்கள், உதவியாளர்கள் அனைவரையும் மிகுந்த நன்றிப் பெருக்கோடு நினைவு கூருகின்றோம். இறைவன் வழங்கிய இன்னுயிரை தங்கள் வைத்திய சேவையினால் காப்பாற்றிய உங்கள் மறைமாவட்ட மருத்துவத் துறையினரை எங்கள் குடும்பங்களும், சமூகங்களும் எப்படி மறக்க இயலும்?

**மன்னார் மறைமாவட்ட ஆயர்**

எல்லாவற்றிற்கும் மேலாக தனது அனைத்து பணியாளர்களையும் ஊக்குவித்து, அனைத்து வளங்களையும் ஒருமுகப்படுத்தி, மன்னார் மறை மாவட்டத்துக்குள் கொண்டு வரப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான எம்மக்களை தம் சொந்த மந்தையாக ஏற்று மிகுந்த அன்போடும் கரிசனையோடும் பராமரித்த தலைமைப் பணியாளன், ஆயர் இராயப்பு யோசேப்பு அவர்களை விசேடமாக நன்றியோடு நினைவு கூருகின்றோம். அவர் எம் மக்களை மனிதாபிமானத்துடனும், கிறிஸ்தவ மதிப்பீடுகளுடனும் ஏற்றுக் கொண்டமை, தம் பணியாளர்கள் எம்மக்களுக்கு முன்னுரிமையாகப் பணிபுரிய ஊக்குவித்தமை, பணிகளை ஒருங்கிணைப்பதற்காக கூட்டிய மாதாந்த கூட்டங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களோடு நடத்திய பேச்சு-வார்த்தைகள் யாவற்றையும் மிகுந்த நன்றிப்பெருக்கோடு நினைவு கூருகின்றோம்.







அத்துடன் சரணடைந்த முன்னைய நாள் போராளிகளின் தேவைகளை உணர்ந்து அவர்களின் உடல், உள ஆன்மீக விடயங்களுக்காக விசேட கவனமெடுத்து பணியாளர்களை ஊக்குவித்ததையும், அரச இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்குரிய உதவிகளை செய்ய தீவிரமாக முயன்றதையும் நாம் ஒரு போதும் மறக்க இயலாது. இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் தனிப்பட்டவிதத்திலும், தனது மறைமாவட்ட அமைப்புக்கள் ஊடாகவும் புரிந்த சேவைகளை வார்த்தைகளில் வடிப்பதென்பது இலகுவான விடயமல்ல. தனது சுகயீனங்கள் மத்தியிலும் இடம் பெயர்ந்த மக்களின் முகாம்களுக்கு கிரமமாக சென்று திருப்பலி நிறைவேற்றி, மக்களோடு உறவாடி அவர்களின் வேதனையான அனுபவங்களை கேட்டறிந்து, தனது பிரசன்னத்தாலும் அன்பான வார்த்தைகளினாலும், ஆறுதல் அளித்ததை எம்மக்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள். அவரது பணிப்பின் பேரில் இயங்கி பல்வேறு மட்டத்தில் பணிகளை ஒருங்கிணைத்த குரு முதல்வர், வாழ்வுதய இயக்குனர், உதவி இயக்குனர்கள், பங்குத்தந்தையர்கள், உதவிப் பங்குத்தந்தையர்கள், வாழ்வுதயப் பணியாளர்கள், பங்குமக்கள், அருட்சகோதரிகள் ஆகிய அனைவரையும் இதயம் நிறைந்த நன்றி பெருக்கோடும் அன்போடும் நினைவு கூறுகின்றோம்.

**இறுதியாகவும் எல்லாவற்றிக்கும் மேலாகவும்**

எம் மக்களின் வேதனை நிறைந்த கால கட்டத்தில் எம் மக்களுக்கு அன்போடு பணிபுரிய கருணையும் சேவை மனப்பான்மையும் கொண்ட இறை பணியார்களையும், இறைமக்களையும் கொண்ட ஒரு அயல் மறைமாவட்டத்தை தந்ததற்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு இதயம் நிறைந்த நன்றிகளைப் பாடி நிற்கின்றோம். வேதனைகள் நிறைந்த மக்களோடு என்றும் பிரசன்னமாக இருக்கும் அந்த இறைவன் உங்களைத் தொடர்ந்தும் ஆசீர்வதித்து, கிறிஸ்தவ மதிப்பீடுகளோடு நீங்கள் தொடர்ந்து வாழவும், பணிபுரியவும் உங்களை வழிநடத்துவாராக!

அன்புடன் கிறிஸ்துவின் குடும்பத்தில் உங்கள் சகோதரர்களான யாழ். மறைமாவட்ட ஆயர், குருக்கள்!

அருட்பணியாளன் யோ. போல் றொகான்
செயலர்,
யாழ் மறைமாவட்ட குருக்கள் அவை
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

## மன்னார் மறைமாவட்ட / பங்குத்தளச் செய்திகள்

# “தேவையிலுள்ளோரின் திருச்சபை”
## அமைப்பின் மன்னார் மறைமாவட்ட வருகை

தகவல் : அருட்பணி. சுரேந்திரன் றெவல்
ஆயரின் செயலர், ஆயர் இல்லம், மன்னார்.

ஜேர்மனியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் “தேவையிலுள்ளோரின் திருச்சபை” (Church in need) அமைப்பின் உறுப்பினர் வெரோணிக் வோகல் (Veronique Vogel), ரெயின்கார்ட் பக்கஸ் (Reinhard Backes) ஆகியோர் கடந்த 9-10/05/2010 ஆகிய இரு தினங்கள் மன்னார் மறைமாவட்டத்தின் பல இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு மறைமாவட்ட தேவைகள் மதிப்பிடப்பட்டுள்ளன. இவர்களை எமது மறைமாவட்ட ஆயர் அதி.வண. இராயப்பு யோசேப்பு அவர்கள் மீள் குடியேறிய மக்களின் வாழ்விடங்களுக்கு அழைத்துச் சென்று போரினாலே உடைந்து, சேதமுற்றிருக்கும் ஆலயங்கள் மாணவர் விடுதிகள் போன்றவற்றை காண்பித்து நிலைமைகளை விளக்கியிருந்தார். தொடர்ந்து மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அவர்கள் நலன்புரி முகாம்களுக்கு இவர்களைஅழைத்துச் சென்றிருந்தார். 10.05.2010 அன்று பி.ப 4.00மணிக்கு ஆயர் இல்லத்தில் மறைமாவட்டத்தில் பணிபுரியும் ஆணைக்குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் இயக்குனர்கள், மாணவர் விடுதிகளை பராமரிக்கும் அருட்சகோதரிகளுடனான கலந்துரையாடல் இடம் பெற்றது. அவ்வமர்வில் மறைமாவட்டத்தின் பணிகள் எடுத்துரைக்கப்பட்டு தேவைகள் முன்வைக்கப்பட்டன. இவ்வமைப்பின் நிதியுதவியால் கட்டியெழுப்பப்பட்ட மன்னார் புனித செபஸ்தியார் பேராலய தியான மண்டபத்தையும் வருகை தந்திருந்த உறுப்பினர்கள் பார்வையிட்டுச் சென்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அளவக்கை பங்கின் மானங்கவெளியில் புதிதாய் அமைவுற்ற புனித சூசையப்பர் ஆலயத் திறப்பு விழா

தகவல்: அ. பத்திநாதன் (வின்சன்), மானங்கவெளி, அளவக்கை.



1958ம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளப் பெருக்கில் முற்றாக அழிவுற்ற மானங்கவெளியின் புனித சூசையப்பர் ஆலயம் கிராம மக்களின் முழு முயற்சியின் பயனாய் மீண்டும் தோற்றம் பெற்றுள்ளது. வெள்ளப்பெருக்கில் ஆலயம் அழிந்து போன நிலையில் புனித சூசையப்பரின் திருச்சுரூபம் வாழ்க்கைப்பெற்றான் கண்டல் புனித நீக்கிலார் ஆலயத்தில் வைக்கப்பட்டு இதுவரை காலமும் பேணப்பட்டு வந்தது. கிராம மக்களின் சொந்த முயற்சியின் பயனாக உருப்பெற்ற புதிய ஆலயத்தின் அபிஷேகமும் திறப்பு விழாவும் கடந்த 30.04.2010 அன்று இனிதே நிறைவெய்தியது. மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அவர்களினால் இவ்வாலயம் திறந்து வைக்கப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டதுடன் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நற்கருணை ஆராதனையும் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் பங்குத்தந்தை அருட்பணி. மாக்கஸ் அடிகளாருடன் இணைந்து அன்பிய இயக்குனர் அருட்பணி. டக்ளஸ் லோகு அவர்களும் கலந்து கொண்டார். மறுநாள் 01.05.2010 அன்று புனித சூசையப்பர் திருவிழா சமூக தொடர்பு அருட்பணி மைய இயக்குனர் அருட்பணி. பெனோ அடிகளாரின் தலைமையில் பங்குத்தந்தையின் இணைவில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

# விவிலிய புதிர் போட்டி முடிவுகள் – 2010

அருட்பணி. ஸ்ரனி அன்ரனி OMI
இயக்குனர்: விவிலிய மறைத்தூது ஆணைக்குழு, மன்னார் மறைமாவட்டம்.

மன்னார் மறைமாவட்ட விவிலிய மறைத்தூது ஆணைக்குழுவினால் குடும்பத்தவர்களுக்காக நடாத்தப்பட்ட விவிலிய புதிர் போட்டியில் பின்வருவோர் வெற்றிபெற்றுள்ளனர். மறைமாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட இப்போட்டி பங்குகளில் சித்திரை மாதம் 10ம் திகதி இடம் பெற்றது.

**1ம் இடம** திருமதி ஜஸ்ரின் இம்மானுவேல் தேவவதனி – வஞ்சியங்குளம் பங்கு (பரிசுத் தொகை 3000/=)

**2ம் இடம்** மெ.சுகந்தினி – தோட்டவெளிப் பங்கு (பரிசுத் தொகை 2000/=)

**3ம் இடம** இக்னேசியஸ் லக்சுமி – இலுப்பைக்குளம் பங்கு (பரிசுத் தொகை 1000/=)

**ஆறுதல் பரிசு** பெறுவோர் விபரம் (ரூபா 500/=)

இ. மரிய செல்வம் – தோட்டவெளி , பி. மேரி றோசா பெல்கிறேசியா – எழுத்தூர் பங்கு, R. மீனா – மன்னார் பேராலயம், J. அமலநாயகி – கீளியன் குடியிருப்பு பங்கு, அலெக்சாந்தா மார்கிரேட் ராணி – இலுப்பைக்குளம் பங்கு, திருமதி E.J. பொஸ்கோ – அளவக்கை பங்கு, செபநேசன் நோபிள் – மன்னார் பேராலயப் பங்கு, த. டக்சினி – கற்கிடந்தகுளம் பங்கு,திருமதி N.J. சிறிதரன் குரூஸ் – வங்காலை பங்கு, அ. மரிய மனோகரி – தேவன்பிட்டி பங்கு.

போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது பாராட்டுகளும் நன்றியும். போட்டியை நடாத்த ஒத்துழைத்த பங்குத் தந்தையர்களுக்கும் நன்றிகள்! பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

## ஆணைக்குழுக்களின் குறிப்பேட்டிலிருந்து....

### விவிலிய மறைத்தூது ஆணைக்குழு

**1) விவிலிய வகுப்புகள்**

மறைமாவட்டத்தில் விவிலிய அறிவை வளர்க்கும் வகையில் மாதந்தோறும் தாழ்வுபாடு, மன்னார் பேராலயம், கீளியன்குடியிருப்பு, எழுத்தூர், பள்ளிமுனை போன்ற பங்குகளில் விவிலிய வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன. பங்குகளில் பணிபுரியும் பணியாளர் குழுக்கள் இதில் பங்கெடுத்து வருகின்றனர்.

**2) நற்செய்தி அறிவிப்பு பெருவிழா**

பங்குகள் தோறும் பள்ளிமுனை ‘சங்கமம்’ இசைக்குழுவினருடன் இணைந்து “நற்செய்தி அறிவிப்பு பெருவிழாக்கள்” நடாத்தப்பட்டு வருகின்றன. கடந்த வைகாசி மாதம் 2ம் திகதி இந்நிகழ்வு பள்ளிமுனையில் இடம்பெற்றது. இசை மூலம் நற்செய்தியை மக்கள் மத்தியில் மீளறிவிப்பு செய்யும் பணியில் மன்னார் மறைமாவட்ட விவிலிய மறைத்தூது ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது. இதுவரை ஐந்து நற்செய்தி அறிவிப்பு பெருவிழாக்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**3) நற்செய்தி எழுச்சிக்கூட்டம்**

நற்செய்தி எழுச்சிகூட்டங்கள் கிராமங்களை மையப்படுத்தி நடாத்தப்பட்டு வருகின்றன. கடந்த பங்குனி மாதம் கற்கிடந்தகுளப் பங்கிலும் சித்திரை மாதம் செட்டிகுளப் பங்கிலும் நற்செய்தி எழுச்சிக்கூட்டங்கள் இடம்பெற்றன. கிராமங்களில் வாழும் கிறிஸ்தவர்கள் மத்தியில் விவிலிய எழுச்சியை ஏற்படுத்துமுகமாக இவை நடைபெற்று வருகின்றன.

**4) மாணவர் விவிலிய கழகங்கள்**

பாடசாலை மாணவர்கள் மத்தியில் விவிலிய வாசிப்பை ஊக்குவிக்குமுகமாக “மாணவர் விவிலிய கழகங்கள்” (Student Bible Clubs) பங்குகள் தோறும் ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் விவிலிய மறைத்தூது ஆணைக்குழுவினால் விவிலிய அறிவை வளர்க்குமுகமாக போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளதோடு விவிலிய அடிப்படைகளை விளக்கும் துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

தகவல் : அருட்பணி. ஸ்ரனி அன்ரனி, அ.ம.தி, இயக்குனர்,
விவிலிய மறைத்தூது ஆணைக்குழு, மன்னார் மறைமாவட்டம்.

### வழிபாட்டு ஆணைக்குழு

## விடத்தல்தீவு பங்கில் வழிபாட்டுக் கருத்தரங்கு

கடந்த 08/05/2010 சனிக்கிழமை அன்று மீள்குடியேற்றம் நடந்துள்ள விடத்தல்தீவுப் பங்கில் மறைமாவட்ட வழிபாட்டு ஆணைக்குழுவால் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. வழிபாட்டினுடைய உட்பொருள், அதன் நோக்கம், வழிபாட்டில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்கு முறைகள் என்பன இக்கருத்தமர்வில் எடுத்துரைக்கப்பட்டன. இடப்பெயர்வின் பின் மீள்குடியேறிய நிலையில் இப்பங்கில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் பங்கு பற்றிய உறுபபினர்கள் பல புதிய விடயங்களையும் பயனுள்ள கருத்துக்களையும் அறிந்து பயன் பெற்றதை காணமுடிந்தது. இக்கருத்தரங்கில் வழிபாட்டுக்குழு உறுப்பினர்கள், பாடகர் குழாம் உறுப்பினர்கள், பீடப்பணியார்கள் மற்றும் ஏனைய பக்தி சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். வழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. கிறிஸ்துநாயகம் அவர்களும் அவருடைய குழுவினரும் ஒன்றாகச் சேர்ந்து இக்கருத்தரங்கை நடாத்தியிருந்தனர். அதே நாளில் திருவாளர். பெஞ்சமீன் அவர்களால் விடத்தல்தீவு பங்கில் ஆண்கள் தோழமைக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### இயேசு சபை அகதிப்பணி (JRS) அமைப்பு

## மீள்குடியேறிய மக்கள் மத்தியில் JRS இன் முன்பள்ளி செயற்பாடுகள்



கடந்த காலங்களில் ஏற்பட்ட பாரிய யுத்தத்தினால் மக்கள் பல இன்னோரன்ன துன்பங்களை அனுபவித்து இடம்பெயர்ந்து மீண்டும் தத்தமது சொந்த பிரதேசங்களில் குடியேறி வருகின்றனர். அவர்களுக்கு தம்மால் இயன்றளவு உதவிகளை புரிந்து வரும் தொண்டு அமைப்பான JRS (இயேசு சபை அகதிப்பணி) நிறுவனமானது கல்வி கற்கின்ற சிறார்கள் மேல் கரிசனை கொண்டு கல்விப்பணியினை முன்னெடுத்து வருகின்றது. இத்திட்டத்தின் ஒரு செயற்பாடாக “முன்பள்ளி நடாத்துதல்” செயற்பாட்டிற்கான கட்டடங்களை அமைத்து அதில் மாணவர்கள் கற்பதற்கு ஏற்ற வழி வகைகளை செய்து வருகின்றது. அதன் ஓர் அங்கமாகவும் நிகழ்வாகவும் JRS இன் மறைந்த மன்னார் மாவட்ட இணைப்பாளர் அமரர். அருட்பணி. பாக்கியரஞ்சித் அடிகளாரின் பெயர் கொண்ட முன்பள்ளி கடந்த 05.05.2010 அன்று இலுப்பைக்கடவையில் திறந்து வைக்கப்பட்டது. மேலும் அதே நாள் “அன்னை திரேசா” என்ற பெயர் கொண்ட முன்பள்ளி கட்டடமும் இத்திக்கண்டல் கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து 06.05.2010 அன்று வண்ணாங்குளம் கிராம முன்பள்ளி கட்டடமும் 12.05.2010 அன்று மூன்றாம்பிட்டி முன்பள்ளி கட்டடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதில் பங்குத்தந்தையர்களான அருட்தந்தை. சுகுணராஜ், அருட்தந்தை. லக்கோன்ஸ், அருட்தந்தை. S. ஜெயபாலன், அருட்தந்தை. E. செபமாலை ஆகியோரும் JRS செயற்திட்ட இயக்குனர் அருட்பணி. இராஜநாயகம் அடிகளாரும், JRS பணியாளர்கள், கிராம பிரமுகர்கள், ஆசிரியர், பெற்றோர் போன்றோரும் கலந்து சிறப்பித்தனர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கான காலணி மற்றும் சீருடைகள், கற்றல், கற்பித்தல் உபகரணங்கள், தளவாடங்கள் போன்றனவும் வழங்கப்பட்டுள்ளன.

# சமூக தொடர்பு அருட்பணி மையத்தின் உலக தொடர்பாடல் தின விழா

44வது உலக தொடர்பாடல் தினத்தை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட சமூக தொடர்பு அருட்பணி மையத்தினால் மன்னார் நகர மண்டபத்திலே மே மாதம் 23ம் திகதி கலை நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. இந் நிகழ்வில் “யேசுவிற்காக கரைதல்..” என்ற மையப் பொருளிலே புனித சவேரியாரின் நாட்டுக் கூத்தும் புனித செபஸ்தியாரின் நாட்டுக் கூத்தும் முறையே முருங்கன், நானாட்டான் பங்கு மக்களாலே மேடையேற்றப்பட்டன. மேலும் கடந்த தவக்காலத்திலே “உயிர்ப்பின் நம்பிக்கையில்...” என்ற யேசுவின் பாடுகள் காட்சிகளிலே பங்குபற்றிய கலைஞர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு, நீண்டகாலமாக மன்னார் மறைமாவட்ட சமூக அருட்பணி மையத்தோடு இணைந்து ‘கலைவழி இறைபணி’ என்று தங்களையே அர்ப்பணித்த மூத்த கலைஞர்களுக்கும் பணியாளர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. பிரதம அதிதி குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அவர்களால் மூத்த கலைஞர்களான நானாட்டான் பங்கைச் சேர்ந்த திரு.செ.மாசிலாமணி அவர்களுக்கு அருட்பணி. பஸ்ரியன் விருதும் தாழ்வுபாடு பங்கைச் சேர்ந்த திரு. பர்னாந்து பீரிஸ் அவர்களுக்கு அருட்பணி. நோபேட் விருதும், முருங்கன் பங்கைச் சேர்ந்த திரு. A.D. தேவதாசன் அல்மெய்டா அவர்களுக்கு அருட்பணி. (கிளி) கருணா ரெட்ணம் விருதும் வழங்கப்பட்டதோடு இம்மூவருக்கும் **“இறைகலை வேந்தர்”** எனும் நாமம் சூட்டப்பட்டு பொன்னாடைகள் போர்த்தப்பட்டன. மேலும் அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிகோ அவர்களுக்கு அருட்பணி. ஜிம்பிறவுண் விருதும், கரகாட்டம் ஆடிய விடத்தல்தீவு பங்கு யுவதிகளுக்கு அருட்பணி. பாக்கிய ரஞ்சித் விருதும் வரவேற்பு நடனத்தை வழங்கிய புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவிகளுக்கு அருட்பணி. சரத் ஜீவன் விருதும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வின் இறுதியிலே உயிர்ப்பின் நம்பிக்கையில் என்ற யேசுவின் பாடுகள் காட்சி அடங்கிய இறுவெட்டும் வெளியிடப்பட்டது. குருக்கள், கன்னியர், மாணவிகள் இன்னும் கலைஞர்கள் என்று பலர் இந் நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். குருமுதல்வர் அருட்பணி விக்ரர் சோசை அவர்கள் பிரதம அதிதியாக இதில் கலந்து சிறப்பித்திருந்தார்.

( நிழற்பட பதிவுகளை 12ம் பக்கத்தில் காணவும்)

# குருத்துவ பொழிவு

குருக்களின் ஆண்டையொட்டிய சிறப்புக் கட்டுரை

## மறைமாவட்ட அருள்பணியாளரின் ஆன்மீகம்

ஆயர் செ. சி. சிங்கராயன்,
சேலம் மறைமாவட்டம்.

### 1. ஆன்மீகம் என்பது என்ன?

இறைவன் நமக்கு விடுக்கும் செய்தியை விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் அன்பிலும் தனிநபராகவோ அல்லது குழுவாகவோ பெற்றுக்கொள்வதும் அதை வெளிப்படுத்து வதும் ஆன்மீகம் என்று சொல்லலாம். ஒருவருடைய வாழ்வை நிர்ணயிப்பதும், நெறிப்படுத்துவதும் இந்த ஆன்மீகம்தான்.

ஆன்மீகம் என்ற சொல் இலத்தின் மொழியிலுள்ள 'ஸ்பிரித்துவாலிதாஸ்' என்ற வார்த்தையிலிருந்து வந்த ஒன்றாகும். ஆவியாரில் இருத்தல் என்பது இந்த வார்த்தையின் பொருளாகும். ஆவியாரில் இருத்தல் என்பது ஒருவர் தன் மனித ஆவியோடும், கடவுளோடும், ஆன்மாவோடும், உடலோடும் இணைந்து இருக்கின்ற நிலை; தூய ஆவியானவரால் வழிநடத்தப்படுகின்ற ஒரு நிலை. ஆன்மீகம் என்பது கடவுள் நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நாமும் அந்நிறைவை நோக்கித் தொடர்ந்து நகர்ந்துகொண்டிருக்கும் ஓர் இயக்கநிலை (மத் 5:48).

கிறிஸ்தவ ஆன்மீகம் என்பது கிறிஸ்துவின் ஆவியால் தூண்டப்பட்டு, ஆட்கொள்ளப்பட்டு, வழிநடத்தப்பட்டு வாழுகின்ற ஒரு வாழ்வாகும். இது கிறிஸ்துவின் ஆவி மனிதரில், அவருடைய முழு ஆளுமையில், அவர் பிறரோடு கொள்ளும் உறவில் வெளிப்படும் வாழ்க்கை முறை எனலாம்.

### 2. கிறிஸ்தவ ஆன்மீகத்தின் தன்மைகள்

கிறிஸ்தவ ஆன்மீகம் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவரும் கிறிஸ்துவின் மீட்புச்செயலைத் தன்னுள் தாங்கி, புதிய நெறிமுறைகளை அமைத்துக் கொள்வதும் திருச்சபையின் மீட்புப் பணியில் பங்கேற்பதுமாகும். இது மூவொரு இறைவனை மையப்படுத்துவது. தந்தை, மகன், தூய ஆவியோடு மனிதர் கொண்டுள்ள ஆழ்ந்த உறவைக் குறிக்கும். இது கிறிஸ்துவை மையப்படுத்திய ஆன்மீகம். இயேசு கிறிஸ்துவைத் தனி மனித வாழ்வின் மையப்பொருளாகவும் வாழ்வின் மாதிரியா-கவும் கொண்டு விளங்கும்.

தன்னுடைய விசுவாச வாழ்க்கைக்கு ஓர் உருவம் கொடுத்து, மனிதர் கடவுளோடும், அயலாரோடும் கொண்டுள்ள உறவை ஆழப்படுத்தி, அவரை முழு மனிதராக உருவாக்கும். மனிதர் உள்மன இறை அனுபவங்களை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கு செயலாக்கம் கொடுக்கும். இறைவனையும் தன்னை எதிர் நோக்கியுள்ள அனைத்தையும் திறந்த மனதோடு ஆய்ந்தறிந்து வாழ்வின் சவால்களை எதிர்கொள்ளும்.

### 3. அருட்பணியாளரும் ஆன்மீகமும்

இயேசு கிறிஸ்து எப்போதும் ஆவியானவரின் தூண்டுதலுக்கு ஏற்பவே வாழ்ந்தார், செயல்பட்டார் (லூக் 4:1,14,18). யார் யாரெல்லாம் தங்களைத் தூய ஆவியிடம் கொடுத்து, அவரின் தூண்டுதலிலும் வழிநடத்துதலிலும் செயல்படுகிறார்களோ அவர்களை இறைவன் தேர்ந்தெடுத்து, அவர்கள் வழியாகத் தனது அருட்செயல்களை இன்றும் நிகழ்த்துகிறார். இவர்கள் பவுலோடு சேர்ந்து, வாழ்வது நானல்ல. என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார் என்று கூறமுடியும் (கலா 2:20, திப.12).

அருட்பணியாளர்கள் என்பதற்காக அவர்கள் நிறைவுள்ளவர்களாக இருக்க வேண்டும் (மே.உ.த. 12). அவர்கள் நிறைவேற்றுகின்ற திருவருட்சாதனங்கள் இறையருளின் ஊற்றுக்கள். அவைகள் ஒவ்வொரு அருட்பணியாளரின் உடலிலும், ஆன்மாவிலிருந்தும் தண்ணீரைப்போல வழிந்தோடுகின்றன.

### அருட்பணியாளர்கள் ஆன்மீகத்தின் இயல்பு

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர், 'மேய்ப்பர்களை உங்களுக்குத் தருவேன்' (மே.உ.த) என்ற சுற்றுமடலில் பின்வருமாறு கூறுகின்றார். "எந்த நிலையிலும், பணிப்பொறுப்பிலும் இருப்பினும் கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டோர் அனைவரும் கிறிஸ்தவ வாழ்வின் முழுமைக்கும், அன்பின் நிறைவுக்கும் அழைக்கப்பெற்றிருக்கிறார்கள்" (திருச்சபை. 40). இந்தக் கூற்று அருட்பணியாளர்களுக்கு மிகவும் பொருந்தும். அவர்கள் கிறிஸ்தவ அன்பின் நிறைவுக்கு அழைக்கப்படுவது, அவர்கள் திருமுழுக்குப் பெற்றவர்கள் என்பதால் மட்டுமல்ல; மாறாக அவர்கள் அருட்பணியாளர்கள் அதாவது குருத்துவம் என்ற திருவருட்சாதனத்தைப் பெற்றிருப்பதாலே அவர்கள் தூய்மையின் நிறைவில் வாழ அழைக்கப்பெற்றிருக்கிறார்கள் (மே. உ. த. 19). அருட்பணியாளர்களின் இந்த தனித்தன்மை வாய்ந்த ஆன்மீகத்தைத் தீர்மானிக்கும் காரணிகள்:

- திருச்சபையின் தலையாக, ஆயனாக, மணவாளனாக இருக்கும் கிறிஸ்துவில் உருமாற்றம் கொண்டிருத்தல் (தி.ப. 12, மே. உ. த. 21.)
- திருச்சபையோடு உறவோடிருத்தல். தன்னையே முழுமையாகத் திருச்சபைக்குக் கொடையாகக் கொடுத்தல்.
- கீழ்ப்படிதல், கற்பு, ஏழ்மை ஆகியவற்றை வாழ்தலும், சான்று பகர்தலும் (மே. உ. த. 27-30)
- செபமும் தியானமும் (திருப்புகழ் மாலை) பணிவாழ்வை இயக்குகின்ற கருவிகள் (மே. உ. த.21).
- புதிய இதயம் கொண்டவராக (எசே.36:26) ஆவியின் ஆற்றலால் செயல்படுதல் (லூக் 4:1).

பகிர்வு, பற்றின்மை, உபசரிப்பு, பொறுமை, தாழ்ச்சி போன்ற புண்ணியங்களை வாழ்ந்து காட்டுதல்.

கருத்தமைதி, தியானம், ஆன்மநெறிப்பாடு, மரியன்னை பக்தி போன்ற பக்திமுயற்சிகளில் உண்மையாக, முழுமையாகப் பங்கெடுத்தல்.

அமைதியில் நற்கருணை ஆண்டவருக்கு முன் செபிப்பதும் ஆராதிப்பதும் அவருக்கு நன்றி கூறுவதும். பயனுள்ள நற்கருணைக் கொண்டாட்டமும், கிறிஸ்துவின் மறையுண்மைகளைப் போதித்தலும் ஆகும்.

### 4. மறைமாவட்ட அருட்பணியாளர்களின் சிறப்பான ஆன்மீகம்

திருச்சபையின் அழைப்புகள் பலவிதம். சிலர் திருமண வாழ்க்கைக்கு அழைக்கப் படுகிறார்கள், சிலர் தனித்த வாழ்வுக்கு அழைக்கப்படுகிறார்கள், இன்னும் சிலர் துறவற வாழ்க்கைக்காக அழைக்கப் படுகிறார்கள். ஒவ்வொரு அழைத்தலும் அதற்கே உரிய ஆன்மீகத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இத்தகைய ஆன்மீகத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளிலும் (திருச்சபை 28,தி.அ பணி.28, தி.ப.வா. 280) மற்றும் மேய்ப்பர்களை உங்களுக்குத் தருவேன் என்ற திருத்தந்தையின் சுற்றுமடலிலும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அருட்பணியாளருடைய பணிவாழ்வும், ஆன்மீக வாழ்வும் கீழ்காணும் தன்மைகளைக் கொண்டுள்ளன.


(தொடரும்)

## யாழ். மறைமாவட்டத்திற்கு நான்கு புதிய குருக்கள்



**அருட்பணி. அ. அன்ரனி ஜெயரஞ்சன்**

இவர் திரு.திருமதி அன்ரனி ஜெயரட்ணம் அன்னமலர் ஞானறஞ்சிதம் தம்பதிகளின் மகனாக 11.12.1978 அன்று முல்லைத்தீவு அளம்பில் கிராமத்தில் பிறந்தார். அளம்பில் தூய அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த இவர் தனது ஆரம்ப கல்வியை மு/அளம்பில் றோ.க.த.க. பாடசாலையிலும், உயர் கல்வியை மு/செம்மலை மகா வித்தியாலயத்திலும் நிறைவு செய்து யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடத்திலும், மன்னார் மடுமாதா சிறிய குருமடத்திலும் ஆரம்ப பயிற்சியைப் பெற்றார். யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல், இறையியல் குருத்துவக் கல்வியை நிறைவு செய்து மெய்யியல்மாணி, இறையியல்மாணிப் பட்டங்களைப் பெற்றார்.




**அருட்பணி. ஸ். டியூக் வின்சன் (ஜீவம்)**

இவர் திரு.திருமதி ஸ்ரனிஸ்லாஸ் மாக்கிறேட் தம்பதிகளின் மகனாக 29.07.1979 அன்று இரணைப்பாலை என்னும் கிராமத்தில் பிறந்தார். இரணைப்பாலை புனித பற்றிமா மாதா ஆலயத்தைச் சேர்ந்த இவர் தனது ஆரம்ப கல்வியை புதுக்குடியிருப்பு புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலையிலும், உயர் கல்வியை புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்திலும் நிறைவு செய்து மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் ஆரம்ப பயிற்சியைப் பெற்றார். யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல், இறையியல் குருத்துவக் கல்வியை நிறைவு செய்து மெய்யியல்மாணி, இறையியல்மாணிப் பட்டங்களைப் பெற்றார்.



**அருட்பணி. ஆ. ஜஸ்ரின்**

இவர் திரு.திருமதி ஆதர்பூத்துரை அன்னம்மா தம்பதிகளின் மகனாக 14.11.1980 அன்று கல்மடு என்னும் கிராமத்தில் பிறந்தார். வட்டக்கச்சிப் பங்கு புனித பத்தாம் பத்திநாதர் ஆலயத்தைச் சேர்ந்த இவர் தனது ஆரம்ப கல்வியை இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவு செய்து யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் ஆரம்ப பயிற்சியைப் பெற்றார். யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல், இறையியல் குருத்துவக் கல்வியை நிறைவு செய்து மெய்யியல்மாணி, இறையியல்மாணிப் பட்டங்களைப் பெற்றார்.



**அருட்பணி. ஆ. மைக் மயூறன்**

இவர் திரு.திருமதி ஆரோக்கிய நாதர் கமலராணி தம்பதிகளின் மகனாக 01.08.1981 அன்று யாழ்.சுண்டுக்குளி என்னும் இடத்தில் பிறந்தார். யாழ். தூய மரியன்னை பேராலயத்தைச் சேர்ந்த இவர் தனது ஆரம்ப மற்றும் உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நிறைவு செய்தார். குருவாக உருவாகும் எண்ணத்தை தன்னுள் விதைத்துக்கொண்ட இவர் யாழ். மடுத்தீனார் சிறிய குருமடத்தில், ஆரம்ப பயிற்சியைப் பெற்றார். யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல், இறையியல் குருத்துவக் கல்வியை நிறைவு செய்து மெய்யியல்மாணி, இறையியல்மாணிப் பட்டங்களைப் பெற்றார்.

கடந்த 19.11.2009 அன்று திருத்தொண்டர்களாக உயர்த்தப்பட்ட இவர்கள் கடந்த 27.05.2010அன்று யாழ். மறைமாவட்ட குருக்களாக யாழ். மரியன்னை பேராலயத்தில் அம்மறைமாவட்ட ஆயர் அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்டார்கள். **இவர்கள் பணி சிறக்க மன்னா வாழ்த்தி மகிழ்கின்றது.**

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

### மீனவரின் உழைப்பை மேன்மைப்படுத்தியுள்ளார் கடவுள்

#### நீர்கொழும்பு மே தின நிகழ்வில் பேராயர் உரை



பேராயர் மல்கம் ரஞ்சித் நீர்கொழும்பு மே தின நிகழ்வில் கலந்து கொண்டு கூடியிருந்த மக்களுக்கு மே தின உரை நிகழ்த்தினார். உலக மக்களை கடலுணவால் போசிக்கும் மீன்பாட்டை கண்டடைய மீனவர்கள் கடலிலே பயணம் செய்து கடலலையோடு போராடி நிற்கின்றனர். அவர்களுடைய உழைப்பு மிகவும் உன்னதமானது. ஆண்டவர் தன்னுடைய முதல் சீடர்களாக மீனவர்களை அழைத்ததன் மூலம் மீனவ சமுதாய வாழ்வுக்கு மேன்மையை கொடுத்துள்ளார் என்று பேராயர் எடுத்துரைத்தார்.

### பிரான்சிஸ்கன் மறைபரப்புதல் சகோதரர்கள் சபைக்கு

### புதிய மாகாண முதல்வர்

அருட்சகோதரர் தொபியாஸ் செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் பிரான்சிஸ்கன் மறைபரப்புதல் சகோதரர்கள் துறவற சபையின் இலங்கைக்கான மாகாண முதல்வராக கடந்த ஏப்ரல் 22ம் திகதி 2010ல் மாத்தளையில் நடைபெற்ற சபையின் பொது அமர்வில் மேலாளர் அவர்களால் ஏற்படுத்தப் பட்டுள்ளார். துணை மாகாண முதல்வராக அருட்சகோ. மில்றோய் சாந்தகுமார் அவர்களும் ஆலோசகர்களாக அருட்சகோ. றொபட் அந்தோணி மாக்கஸ், செபமாலை யேசுதாசன் மற்றும் செபஸ்ரியன் ஜோர்ச் ஆகியோரும் மேலாளரால் ஏற்படுத்தப் பட்டுள்ளனர். இச்சபையின் புதிய மாகாண முதல்வர் அருட்சகோ. தொபியாஸ் அவர்கள் 1962ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். மாத்தளை பிரான்சிஸ்கன் மடாலயத்தில் இணைந்த இவர் தனது முதல் வார்த்தைப்-பாட்டை 1980ம் ஆண்டில் கொடுத்து பல அர்ப்பண பணியைத் தொடர்ந்து 1986ம் ஆண்டில் தனது இறுதி வார்த்தைப்பாட்டையும் கொடுத்தார்.

### பேராயரை சந்தித்தார் பிரதம மந்திரி

கடந்த 29ம் திகதி ஏப்ரல் மாதம் இலங்கை பாராளுமன்றத்தின் புதிய பிரதம மந்திரி கௌரவ டி. எம். ஜெயரட்ன அவர்கள் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை பேராயர் இல்லத்தில் நல்லெண்ண அடிப்படையில் சந்தித்தார். பேராயர் அவர்கள் பிரதம மந்திரியை வாழ்த்தியதோடு இந்த நாட்டில் வாழும் சகல சமூகத்தின் மத்தியிலும் சாந்தியும் சமாதானமும் நிலவ முன்னெடுக்-கப்படும் அனைத்து முயற்சிகளின் வெற்றிக்காக மனப்பூர்வமான விருப்பத்தினை தெரிவித்தார்.

### யாழ். கியூடெக் கத்தோலிக்க நிறுவனத்தின் முன்னெடுப்பில் குருநகரில் மீன்பிடி வலைத் தொழிற்சாலை

#### குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார் திருத்தந்தையின் பிரதிநிதி



யாழ்ப்பாண கறிற்றாஸ் - கியூடெக் கத்தோலிக்க அமைப்பின் பாரிய முன்னெடுப்பில் மே மாதம் 06ம் திகதி மீன்பிடி வலைகள் தயாரிக்கும் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான போர்ப்பாதிப்புக்குள்ளான மக்களும் சுனாமி கடற்கோள் அனர்த்தத்தை சந்தித்தோரும் பயன் பெறும் வண்ணம் உருவான இத்தொழிற்சாலை, அந்நிகழ்வின் பிரதம அதிதியான அவுஸ்திரேலிய நாட்டின் உயர் ஸ்தானிகர் மேன்மை மிகு காதி கிங்மன் (Kathy Kingman) அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இவ் வைபவத்தின் சிறப்பு விருந்தினர்களாக பிரான்ஸ் நாட்டின் தூதுவர் மேன்மை மிகு கிறிஸ்ரின் றொபின்சன் அவர்களும் திருத்தந்தையின் பிரதிநிதி அதி.வண. ஜோசப் ஸ்பிரெறி அவர்களும் வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி அவர்களும் கலந்து கொண்டனர். அத்தோடு இந்நிகழ்விற்கு தலைமை தாங்கிய கறிற்றாஸ் கியூடெக் இயக்குனர் அருட்பணி. C.G. ஜெயக்குமார் அவர்களோடு யாழ் ஆயர் அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம், இலங்கை கறிற்றாஸ் அமைப்பின் தலைவர் அதி.வண.ஹெரல்ட் அந்தனி பெரேரா, கறிற்றாஸ் தேசிய இயக்குனர் அருட்பணி. ஜோர்ச் சிகாமணி மற்றும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. K. கணேஷ் ஆகியோர் இணைந்திருந்தனர்.

### தேசிய வின்சன் டி போல் சபை உத்தியோகஸ்தர்கள் திருகோணமலைக்கு வருகை

தகவல் :- பு. அல்பேட், பாலையூற்று.



திருகோணமலை பிராந்திய வின்சன்டி போல் சபையின் வருடாந்த பொது அமர்வு கடந்த 13.04.2010 அன்று நடைபெற்ற போது தேசிய வின்சன் டி போல் சபையின் உபதலைவர் சகோ. வின்சன் போல் பெர்ணான்டோ, பொருளாளர் சகோ. ஒஸ்ரின் C. பெர்ணான்டோ ஆகியோரும் வருகை தந்து தமது கருத்துக்களை, ஆலோசனைகளை வழங்கினர்.

அண்மையில் தெரிவு செய்யப்பட்ட தேசிய சபை புதிய நிருவாகத்தில் முன் வைக்கப்பட்ட தேசிய சபை பிராந்திய சபைகளுக்கு இடையில் தொடர்புகளை மேம்படுத்தல் - இணைந்து செயல்படுதல் எனும் தீர்மானத்திற்கு அமைய தமது நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டிருந்த அன்றைய நிகழ்வின் போது அருட்பணி. கிறைட்டன் அவுட்ஸ் கோன் - சின்னக்கடை பங்குத்தந்தை, அருட்பணி. அந்திரியாஸ் பெர்ணாண்டோ OMI- பாலையூற்று பங்குத்தந்தை ஆகியோரும் சமூகமளித்து வின்சென்சியன்களுக்கு தமது நல்லாசிகளை வழங்கினர்.

## உலகத்திருச்சபை செய்திகள்

### திருத்தந்தை திருச்சபைத் தலைவராகப் பொறுப்பேற்ற ஐந்தாம் ஆண்டு!



உரோமையிலுள்ள கர்தினால்கள் அனைவரும் திருத்தந்தை திருச்சபைத் தலைவராகப் பொறுப்பேற்ற ஐந்தாம் ஆண்டை சிறப்பிக்க உள்ளனர். ஏப்ரல் 16 அன்று தனது 83வது பிறந்த நாளைக் கொண்டாடிய திருத்தந்தை 1927ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஜெர்மனியிலுள்ள பவரியா பகுதியின் மார்க்ல் அம் இன் என்ற ஊரில் பிறந்தார். திருத்தந்தை தன் பிறந்த நாளையும், திருத்தந்தையாகப் பொறுப்பேற்ற ஐந்தாமாண்டு நிறைவையும் தான் பயணம் செய்த மால்ட்டாவில் கொண்டாடினார் என்று திருப்பீட அதிகாரப்பூர்வ பேச்சாளர் இயேசு சபைக்குரு பெதரிக்கோ லொம்பார்தி செய்தியாளர்களிடம் கூறினார்.

### திருத்தந்தை தூன் நகருக்கு விஜயம்



நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல் நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்றார் இயேசு. இந்த இயேசுவின் இறந்த திரு உடலைப் போர்த்திருந்த சவப்போர்வையாக நம்பப்படும் திருத்துணி வட இத்தாலிய நகரான தூரின் பேராலயத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. 4.3m நீளமும் 1m அகலமும் கொண்ட இச்சவப்போர்வை குண்டு துளைக்காத, வெப்பநிலையால் பாதிக்கப்படாதவாறு கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்-பட்டுள்ளது. ஒரு காலத்தில் இது சிலுவைப் போர் வீரர்களால் புனித பூமியிலிருந்து எடுத்துவரப்பட்டது. பிரான்சில் வைக்கப்பட்டிருந்த இதனை பின்னர் 1578ம் ஆண்டிலிருந்து இத்தாலிய சவோய் அரச குடும்பம் பாதுகாத்து வந்தது. இத்தாலிய முன்னாள் அரசர் 2ம் உம் பெத்தோ 1983ல் இதனைத் திருத்தந்தையிடம் ஒப்படைத்தார். தற்போது தூரின் பேராலயத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டுள்ளதும் வத்திக்கானுக்குச் சொந்தமானதுமான இந்த புனிதத் துணி பொது மக்களின் பார்வைக்கென ஏப்ரல் 10ம் தேதி திறந்து வைக்கப்பட்டு மே மாதம் 23ம் தேதி வரை திறந்து வைக்கப்பட்டிருந்தது. இந்தத் திருத்துணியை 20 இலட்சத்திற்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர். இந்தப் புனித துணியைப் பார்வையிடுவதற்காக தூரின் நகருக்கு மே 2ம் திகதி ஞாயிறன்று ஒரு நாள் திருப்பயணம் மேற்கொண்டிருந்தார் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர்.

### உலகக் குருக்கள் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ள அனைத்துக் குருக்களுக்கும் அழைப்பு!



மனித சமுதாயத்திற்குப் பணி செய்வதற்குத் தாங்கள் தயாராக இருப்பதை வெளிக்காட்டும் வண்ணம் உரோமையில் நடைபெறும் உலக குருக்கள் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்கு அனைத்துக் குருக்களும் அழைக்கப்படுகின்றார்கள் என்று கர்தினால் கிளவ்தியோ கியூமஸ் கூறினார்.

உலக குருக்கள் ஆண்டு நிறைவை முன்னிட்டு உலகின் அனைத்துக் குருக்களுக்கும் செய்தி அனுப்பியுள்ள திருப்பீட குருக்கள் பேராயத் தலைவர் கர்தினால் கியூமஸ், குருக்கள் அனைவருக்கும் திருத்தந்தை விடுக்கும் இதயம் நிறைந்த இனிய அழைப்பிற்குப் பதில் சொல்லத் தயங்க வேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளார். வருகிற ஜூன் 9 முதல் 11 வரை உரோமையில் இடம் பெறவிருக்கின்ற நிறைவு விழாவில் கலந்துகொள்வதற்கு அனைத்துக் குருக்களுக்கும் திருத்தந்தை முன்வைத்துள்ள அழைப்பை தனது செய்தியில் சுட்டிக்காட்டினார் கர்தினால். இந்த நவீன உலகின் முன்பாக வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தைப் பெருமளவான குருக்கள் நிறைத்திருப்பது தாங்கள் இவ்வுலகைத் தீர்ப்பிட அல்ல, மீட்க வந்தவர்கள் என்பதை அறிவிப்பதாக இருக்கும் என்றார் கர்தினால்.

### அமெரிக்காவில் அன்னை திரேசாவிற்கு அஞ்சல்தலை



கொல்கத்தா முத்திப்பேறு பெற்ற அன்னை திரேசாவின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு இவ்வாண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டு அஞ்சல்துறை, அன்னை திரேசா தபால்தலை ஒன்றை வெளியிடுவதற்குத் திட்டமிட்டுள்ளது. வரும் ஆகஸ்ட் மாதத்தில் அன்னை திரேசாவின் நூறாவது பிறந்த நாள் ஆண்டு நிறைவடையும் போது அத்தபால்தலை வெளியிடப்படும். 44 சென்ட் விலையுடைய இத்தபால்தலையை அமெரிக்க ஐக்கிய நாட்டு ஓவியர் தாமஸ் பிளாக்ஷீர் வரைந்துள்ளார்.

## வாழ்வு தரும் வார்த்தை

# அசலா? நகலா?

**அருட்தந்தை அந்தோணி பெனடிக்ட்**

நாட்டின் மிகச் சிறந்த வில்வித்தகராக இருக்க வேண்டும் என்பது அரசனின் நெடுநாளைய கனவு. தனக்குத் தெரிந்த சிறந்த வில் வித்தகர்களை எல்லாம் தன் அரசவைக்கு அழைத்து எல்லாப் பயிற்சிகளையும் கற்றுத் தேர்ந்தான். சுருள் வட்டங்களைக் கொண்ட குறி இலக்கு (Bull's eye) பலவற்றை வரைந்து அவற்றைத் தன் அரண்மனைத் தோட்டத்தில் நட்டுவைத்திருந்-தான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அந்த வட்டங்களின் மையப்புள்ளியை நோக்கி சரியாகக் குறிபார்த்து எய்து பயிற்சி செய்வான். எறியும் அம்புகள் 100க்கு 99 முறை சரியாக சுருள் வட்டக்குறி இலக்கின் மையப்புள்ளியில் பாயும். அவனுக்கோ மனம் அமைதி அடையவில்லை. 100க்கு 100 முறை சரியாக அந்த மையப் புள்ளியில் சென்று பாய வேண்டும் என்று அயராது பயிற்சி செய்துகொண்டே இருந்தான்.

ஒருமுறை கிராமத்தின் வழியாகச் சென்று கொண்டிருக்கையில், வீதிச் சுவர்களில் அம்பு எறியும் பயிற்சிக்குப் பயன்படும் சுருள் வட்டங்கள் கொண்ட குறி இலக்குகள் பல நூறு வரையப்பட்டு அந்த இலக்கின் மையப்புள்ளி ஒவ்வொன்றிலும் கச்சிதமாக அம்பு சென்று பாய்ந்திருப்பதையும் கண்டு வியந்தான். அந்த கிராமத்தின் பெரியவரைக் கூப்பிட்டு. "யாரப்பா இது? என் அரசில் உள்ள இந்தக் கிராமத்தில் எனக்குத் தெரியாத இவ்வளவு சிறந்த வில்லாளி! பல நூறு சுருள் வட்டக்குறி இலக்குகள்! அவைகளின் மையப்புள்ளி ஒவ்வொன்றிலும் ஒரு அம்பு! சிறந்த வில்லாளியாக அவன் இருக்க வேண்டும். ஒருமுறை கூட குறி தவறாது, 100க்கு 100 முறை சரியாக எய்யும் வில்லாளி யார் அவன்? நான் அவனைப் பார்க்க வேண்டும்" என்று கேட்டார்.

"அரசே அவன் ஒரு 12 வயதுச் சிறுவன். இதோ அவனை அழைத்து வருகிறேன்" என்ற பெரியவர் சிறுவனை அழைத்து வந்து அரசன் முன் நிறுத்தினார். அரசன் கேட்டார், "தம்பி உன் திறமையைக் கண்டு வியக்கிறேன். உன்னைப்போல் 100க்கு 100 முறை இலக்கின் மையப்புள்ளியில் சரியாக அம்பு எய்யும் முறையை எனக்குச் சொல்லித் தருவாயா?" "சரி அரசே" என்று இசைவுதந்த சிறுவன் அரசரைக் கிராமத்துக்கு வெளியே இருந்த ஒரு குட்டிச் சுவருக்கு அழைத்துச் சென்றான்.


"அரசே உங்கள் அம்பையும் வில்லையும் எடுங்கள்". அரசர் அவ்வாறே செய்தார். நான் சொல்வது போல் செய்யுங்கள். நேராக நிமிர்ந்து நின்று, நன்றாக மூச்சை இழுத்து, வில்லை நெஞ்சளவிற்கு மேல் உயர்த்தி அம்பை நாணில் பூட்டி.... இப்போது இழுத்து விடுங்கள்" என்றான் சிறுவன்.

அவன் கூறியபடியெல்லாம் செய்து அம்பை எறியத் தயாரான அரசன் சிறுவனிடம் கேட்டார், "எல்லாம் சரிதான். நீ சொன்னபடி எல்லாம் செய்துவிட்டேன். எறிவதற்கும் தயார். இப்போது எதை நோக்கி எறிவது? சுருள் வட்டக்குறி இலக்கு எங்கே?"

"அது தான் என் வித்தை அரசே. முதலில் அம்பை எறியுங்கள். அம்பு எந்த இடத்தில் பாய்கிறதோ அதை மையமாகக் கொண்டு அதைச் சுற்றி சுருள் வட்டங்களை நான் வரைந்துவிடுகிறேன்" என்றான்.

குறி இலக்கான சுருள் வட்டங்களை வரைந்து அதன் மையப்புள்ளியை நோக்கி அம்பைச் சரியாக எறியப் பயிற்சி செய்வது ஒரு வழிமுறை. அது வரையறுக்கப்பட்ட ஒரு குறியை அடையத் தன் திறமை, முயற்சி, காலம் அனைத்தையும் அதற்காகச் செலவிடுகிற முறை. நம் வாழ்வாகிய பெரிய புட்டியில் உள்ள எண்ணெய்யைப் புனல் வழியாக வேறொருவர் வடித்து வைத்த சிறிய புட்டிக்குள் அடைப்பது போன்றது இந்த முறை. இதுதான் அரசன் செய்து கொண்டிருந்த பயிற்சி. கண்டு கொண்டிருந்த கனவு.

ஆனால் சிறுவனின் வழிமுறை வேறானது, இயல்பானது. யாரோ வரைந்த இலக்கில் தன் அம்பை எறிவதல்ல; அல்லது தனக்குத் தானே ஒரு இலக்கை வரைந்துகொண்டு அந்தக் குறுகிய இலக்குக்குள் தன் திறமை, முயற்சி, காலம் அனைத்தையும் பாய்ச்சுவதல்ல. தான் எறிந்த இடத்தையே ஓர் இலக்குக் குறியாக மாற்றிவிடுதல். நாம் நாமாக இருக்கும் அந்த இயல்பினை, சுற்றியுள்ள சுருள் வட்டங்களை இனங்கண்டு கொள்ளுதல். நம் வாழ்வாகிய பெரிய எண்ணெய்ப் புட்டியை விளக்காக மாற்றி நம் முயற்சி, திறமை, காலம் இவற்றை திரியில் எரியும் தீபமாக மாற்றி, கொளுந்துவிட்டு எரிந்து, ஒளியும் வெப்பமும் தருதல். இயல்பு வாழ்க்கை என்பது நாமாக,



நமது எண்ணெய்யில், நமது சொந்தத் தீபமாக எரிந்து, நமக்கே உரித்தான ஒளியாய் ஒளிர்ந்து நம்மைச் சுற்றி நமக்கே இணையான வெப்பமாய் பரவுதல். இதுதான் சிறுவன் வாழ்ந்த வில்வித்தை வாழ்வு.

புனல் வழியாகப் பிறர் உருவாக்கிய புட்டிக்குள் தன் எண்ணெய்யை அடைத்துத் தன் அசல் இழந்துப் பிறரின் நகல் தீபங்களாக எரிதல் அல்ல. இவ்வகை எரிதல் அரசன் மேற்கொண்ட வில்லாளி முயற்சி.

"சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களை தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி சிறு பிள்ளைகளுக்கே உரியது. இறையாட்சியை சிறுபிள்ளைகளைப் போன்று ஏற்றுக்கொள்ளாதோர் அதற்கு உட்பட-மாட்டார், என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (மாற்கு 10:14-15). இது இயேசுவின் பொன்மொழி.

இறைவனை, அவரது ஆட்சியை சிறுவர்கள் தான் அறிந்து கொள்ள முடியும். அதன் பங்காளிகள் ஆக முடியும். ஏனெனில் அவர்கள் தங்கள் இயல்பில் இயங்குவார்கள். தன் இயல்பாக இறைவன் எவ்வாறு படைத்தாரோ அந்த இயல்பின் நகலாய் எரிந்து ஒளிர்பவர்கள். படைக்கப்பட்ட பொருள் படைத்தவரின் இலக்கில் செயல்படும் போது அது அதன் முழு இயல்பில் இயங்கும். முழுச் சக்தியாய் செயல்படும். தன் வாழ்வாகிய எண்ணெய்ப் புட்டியின் முழு எண்ணெயி லிருந்து எரியும் அது அசல் ஒளி. அதற்கே உரித்தான நிகரற்ற வெப்பம்.

படைக்கப்பட்ட பொருள் படைத்தவரின் இலக்கைத் தவிர்த்து, தன் விருப்பத்தில் வேறொரு இலக்கிற்குத் தன்னை விட்டுக் கொடுக்கும் போது, தன் அசல் வலிமையை இழந்து விடுகிறது. தன் எண்ணெய்யை வேறொரு சிறிய புட்டிக்குள் அடைத்து அசல் இழந்த வேறொரு நகல் தீபமாய் எரியும். தனக்கே உரித்தான நிகரற்ற வெப்பம் அங்கில்லை. அசல் நகலாகிவிடுகிறது.

இறைவன் நம் அனைவரையும் ஒரே மாதிரியான அச்சில் வார்த்தெடுப்பதில்லை. நாம் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. ஒவ்வொருவரும் ஒரு மாதிரி. இறைவன் படைக்கிறவர். எந்த ஒன்றையும் இன்னொன்றின் பிரதியாகச் செய்வதில்லை. அவரிடம் அசலுக்குக் குறைவில்லை. நாம் ஒவ்வொருவரும் தனித்தனி அசல்கள். யாருடைய நகலோ பிரதியோ அல்ல. நம்மை நமக்கே உரிய தனி, நிகரற்ற, சொந்த இயல்பில் படைத்திருக்கிறார் இறைவன். "வான தூதருக்கும் சற்றே சிறியவராக்கியுள்ளீர். மாட்சியும் மேன்மையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர்" (திபா 8:5-6). நாம் இத்தகைய ஆளுமை பெற்றவர்கள். நாம் நமது தன்னியல்பில் இயங்கும் போதுதான் இந்த ஆளுமை பெறுகின்றோம். நம் இயல்பை பிறரின் வரையறைக்குள் உட்படுத்தும் போது நாம் ஆளப்படுகிறோம். சொந்த ஆளுமை இழந்துவிடுகிறோம். அனைத்தையும் படைத்த இறைவன் மனிதரை இறுதியில் படைத்த போது, "கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும், பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" (தொ.நூ:1:27). படைக்கும் இறைவனின் உருவைத் தாங்கியவர்கள் நாம். இறைவன் படைத்த ஒவ்வொன்றும் அதற்கே உரிய தனிச் சாயலைப் பெற்றது. இறை உருவைத் தாங்கிய நாம் ஒவ்வொருவரும் இந்தப் படைக்கும் இறைவனின் படைப்பாற்றலின் உருவைத் தாங்கியுள்ளவர்கள். நம் வாழ்க்கை என்பது நம்மிடமுள்ள இறைப் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் ஒரு தொடர் நிகழ்ச்சி. நாம் ஒவ்வொருவரும் நமக்கே உரிய சொந்த செயல் முறையில் நம் வாழ்வை நிகழ்த்துவதன் மூலம் மனித சமுதாயத்தில் நமக்கே உரிய சொந்த முத்திரையைப் பதிக்கிறோம். எல்லாரும் செய்வது போல நானும் செய்கிறேன், என்ற பொது முத்திரை அல்ல, இறை உருவைத் தாங்கிய நான் இறைப்படைப்பாற்றலைக் கொண்டு என் முழு இயல்பை இயக்கி நான் வாழும் சூழ்நிலையில் எனக்கே உரிய முத்திரையைப் பதிக்கிறேன். இதுதான் என் சொந்த ஆளுமை. (தொடர்ச்சி 7ம் பக்கம்)

---

## புனிதரின் பாதையில்

### மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

### ஜூன் 13

### புனித பதுவை அந்தோனியார் மறைவல்லுநர்—(கி.பி. 1195 – 1231)

போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் பிறந்த இவர், தம் இறுதி நாட்களை இத்தாலி நாட்டில் பதுவை நகரில் செலவழித்ததாலும், இவரது கல்லறை இங்கே இருப்பதாலும், இவர் பதுவை அந்தோனியார் என்று அழைக்கப்படு கின்றார். இவரது திருமுழுக்குப் பெயர் பெர்டினாண்ட். இவர் கப்புச்சின் சபையில் சேர்ந்தபோது இவருக்கு முன்னோடியாக விளங்கிய தவ முனிவர் (பெரிய) அந்தோனியாரின் பெயராகத் தமது பெயரை மாற்றிக்கொண்டார்.

பிரபு குலத்தில் தோன்றிய இவர் 15 வயதில் அகஸ்டினியன் துறவியானார். 8 ஆண்டுகள் கொயிம்ப்ராவில் தவ முயற்சிகளிலும் வேதக்கல்வி கற்றுக்-கொள்வதிலும் செலவழித்தார். கி. பி. 1220ல் மொரோக்கோவில் கிறிஸ்துவுக்காகக் குருதி சிந்தி உயிர் துறந்த பிரான்சிஸ்கன் துறவிகளின் உடல்களை டான்பேட்ரோ கொண்டு வந்ததைப் புனிதர் பார்த்தார்.

பார்த்த பிறகு அவருக்குள் தாமும் போய் இயேசுவுக்காகக் குருதி சிந்த வேண்டும் என்ற தணியாத தாகம் ஏற்படவே, தற்செயலாக அவரது துறவு மடத்திற்கு வந்த பிரான்சிஸ்கன் சபையாரிடம் தம்மை ஏற்றுக் கொள்ளுமாறு கெஞ்சினார். கி.பி.1221-ல் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

மொரோக்கோவுக்குப் புறப்படத் தம்மைத் தயாரித்துக் கொண்டார். புறப்படுமுன் கொடிய நோயினால் தாக்கப்பட்டு ஐரோப்பாவுக்குத் திரும்பிவிட முயன்றார். எதிர் மாறாக, சிசிலியில் மெசினா நகருக்குக் கப்பல் போய்ச் சேர்ந்தது. நேரே அசிசி நகரை அடைந்தார். அப்போது ஃபோர்லி என்ற இடத்தில் ஒரு குருப்பட்டம் நிகழ எல்லாம் தயார் நிலையிலிருந்தது. விழா மறையுரை ஆற்ற ஒப்புக்கொண்டிருந்த டொமினிக்கன் சபைத் துறவி வர இயலாத நிலை ஏற்பட்டது.

மறையுரை ஆற்றும்படி நம் புனிதரைக் கேட்டுக்கொண்டனர். தன்னம்பிக்கை



இல்லாமலே அவர் இசைந்தார். ஆனால் பேசத் தொடங்கியதும் அவரது திறமை, ஆழமான மறை நூல் அறிவு, நாவன்மை, மக்களின் நெஞ்சங்களை மேலே எழுப்பும் ஆற்றல், அத்தனையும் கேட்டவர் யாவரையும் ஆழ்ந்த வியப்பில் ஆழ்த்தின.

இதை நேரில் பார்த்த சபைத் தலைவர், லாம்பர்டி பகுதி முழுவதிலும் மறையுரை ஆற்றும் பணிப் பொறுப்பை அவரிடம் அளித்தார். மறைக்கல்வியும் துறவிகளுக்கு அவர் கற்றுக்கொடுக்க வேண்டியதாயிற்று. பாவிகள் நூற்றுக் கணக்கில் வந்து அவரிடம் அடைக்கலம் அடைந்தனர். பாறை மனம் கொண்ட பாவிகள், ஞான வாழ்வில் அக்கறை காட்டாதவர் யாவரும், அவரை அணுகிய வண்ணம் இருந்தனர்.

புனித அசிசியாரின் இறப்புக்குப்பின் அந்தோனியார் இத்தாலிக்கு வரவழைக்கப்-பட்டார். அப்போது முதல் இறுதி நாள்வரை பதுவையில் அவர் தங்கினார். ஒரு காட்டுப் பகுதியில் தங்கி கி.பி. 1231-ல் தொடர்ச்சியாக மறையுரை ஆற்றி வந்தார். இதனிடையில் இவர் முற்றிலும் உடல் வலிமையிழந்து காணப்பட்டார். பதுவை நகருக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் இறைவன் திருவடி சேர்ந்தார். ஜூன் 13, 1231-ல் அனைத்து அருட்சாதனங்களையும் பெற்றவராகப் புனிதராகக் காலஞ் சென்றார். அப்போது இவருக்கு வயது 36.

இறந்த மறு ஆண்டே இவருக்குப் புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது. கி.பி. 1946-ல் திருத்தந்தை 12-ஆம் பத்திநாதர் மறைவல்லுநர் பட்டமளித்து இவரைப் பெருமைப்படுத்தினார்.

# மனித பிரபஞ்ச சக்தி

## HUE: HUMAN UNIVERSAL ENERGY

சகோதரி அகுஸ்தீனாள் - C. I .C, மன்னார்.

கடவுள் சக்தியும், மனித சக்தியும் இணைந்து வெளிப்படும் சக்திதான் கடவுள் மனித சக்தி. இதற்கு குணம் அளிக்கும் சக்தி உண்டு.

HUE பயிற்சியினால் 'சக்கராக்கள்' (சுழலும் ஒளி சக்தி) திறக்கப்படுவது மட்டுமன்றி, உள் மன செயல்பாடுகளினால் மனம், உணர்வு, உணர்ச்சிகள் சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் மாற்றங்கள் நிகழ்வதை உணர முடிகிறது.

கடவுள் சக்தியைப் பெற ஆன்மீக உடலை (plasma body) பலப்படுத்த தியானம், செபம், இயற்கையோடு இணைதல் உதவுகிறது. வானில் உள்ள கடவுள் சக்தியை (மின் காந்த அலைகளை) உடலில் பெற்று கைகள் மூலம் நோயின் தன்மை அறிந்து பல்வேறு நோய்களினின்று மக்களை HUE குணமாக்க உதவுகிறது.

அலைந்து திரியும் ஆவிகளின் செயல்பாடுகளினால், மனநிலை பாதிப்பால் அவதிப்படுவோருக்கும் விடுதலை கிடைக்கச் செய்து, இறைப்பிரசன்ன உணர்வில், நன்றி உணர்வில் நாங்களும் நலம் பெற்று பிறரையும் நலம் பெறச் செய்ய முடிகிறது. கடவுள் மீதும் குணமளிப்பவர் மீதும் நம்பிக்கை கொண்டு அணுகும் அனைவரும் நலமடைகிறார்கள். இது நடைமுறை உண்மை. சென்ற இடமெல்லாம் நன்மை செய்து கொண்டே சென்ற இயேசுவின் குணம் அளிக்கும் செயலில் ஈடுபட்டுச் செய்வதில் நிறைவும், மகிழ்வும், இறைவன் பெயரால் வெற்றியும் பெற்றுக் கொண்டே இருக்கிறோம்.

43பேர் பயிற்சி பெற்று ஆயிரக்கணக்கானோர் பயன்பெற உதவிய கடவுளுக்கும், எம் மாநிலத் தலைவி சகோதரி ஜோஸ்பின் அவர்களுக்கும், பயிற்றுவித்த ஆசான்கள் திருமதி ஹெலன் கிறிஸ்டோபர், டாக்டர் அமலாவதி ஆகியோருக்கும் கோடி நன்றிகள்.

அன்பைப் பெறவும் வழங்கவும் தெரிந்த நேர்மறையான சிந்தனையில் வாழ விரும்பும் அனைவரும் குணம் அளிக்கும் சத்தியைப் பெறலாம். நாமும் நலம் பெற்று, பிறரையும் நலமடையச் செய்யலாம்.

'இறைவனின் நாமம் போற்றப்படுவதாக'.

---

## 6ம் பக்க தொடர்ச்சி.....

## அசலா? நகலா?

நமது பழக்க வழக்கங்கள், வழிமுறைகள், விதிகள் எதிர்பார்ப்புகள், பொறுப்புகள் போன்றவை வெவ்வேறாக இருந்தாலும் அவற்றை வாழ்கின்ற செயல்முறையில் நாம் ஒவ்வொருவரும் நமக்கே உரிய சிறப்புச் சுவையைச் சேர்க்கிறோம். அதுதான் நம் சொந்த ஆளுமைச் சுவை.

நம் இயல்பை வாழ்வது என்பது நம் ஆளுமையில் இருப்பது. யாராலும் எதுவாலும் ஆளப்படாதிருப்பது. நம் மையத்திலிருந்து வாழ்வது. நம் செயல்கள் சொற்கள் சிந்தனைகள் எல்லாமே சுருள் வட்டங்களாக அந்த மையத்திலிருந்து ஊற்றெடுப்பது. பிறர் எதிர்பார்ப்புக்கு ஏற்ப என் செயல்களைச் செய்து, சொற்களைப் பேசி அதன் வழியே என்னை யார் என்று படம்பிடித்துக் காட்டுவது அல்ல. மாறாக, நான் யார்? என் இயல்பு என்ன? என்று உணர்ந்து அறிந்து, அந்த அறிவுணர்வின் மலர்ச்சியாகச் செயலைச் செய்தல், சொற்களைப் பேசுதல், இதுவே இயல்பு வாழ்க்கை.

பிறர் பாராட்டை எதிர்பார்த்து, அவரது புகழுரை கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தன்னைச் செயல்பட வைத்தல் ஆளப்படுதல். தன் அறிவுணர்வின் வெளிப்பாடாக செயல் செய்தல் தன் ஆளுமையை வாழ்தல். உலகமே ஒருவரை பாராட்டும்படி ஒருவர் எத்தனை நற்செயல்களைச் செய்தாலும், அவைகள் தன் மையத்தை உணர்ந்த அறிவுணர்வின் மலர்ச்சியாக வெளிப்படாத வரை அச்செயல்கள் எல்லாம் இயல்புச் செயல்கள் ஆகா. எனவே அச்செயல்கள் அவருக்கு தன்னிறைவைத் தரா. "ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் தம்மை இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்?" (மாற் 8:36) என்ற இயேசுவின் பொன்மொழிகள் இவற்றை நன்றாக விளக்குகின்றன.

ஒருவருடைய மதிப்பு மற்றவர்கள் எவ்வாறு அவரைக் கணிக்கிறார்கள் என்பதில் அல்ல, மற்றவர் வரைந்த இலக்குக் குறிக்குள் தன் அம்பைப் பாய்ச்சுவதல்ல. தனக்குள் இறைவன் வைத்த படைப்பாற்றல் மிக்க இறைச்சாயலை உணர்ந்து அதை வாழ்கிறோமா என்பதே அவரைப் பற்றிய சரியான கணிப்பு. மனித ஆளுமையின் மேல் இயேசு நிகழ்த்திய புரட்சிமிக்க தாக்கம் இதுதான். நாமாக இறைவன் நமக்குள் வைத்த முழுமையை உணர வேண்டும். உணர்ந்து அதை வாழ்வாக்க வே.ண்டும்.

இயேசு போதிக்கத் தொடங்கிய போது மக்களுக்கு ஒரு அறிவிப்பையும் ஓர் அழைப்பையும் கொடுத்தார். அது "இறையாட்சி நெருங்கிவிட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற் 1:14) என்பதே. இது தரும் அழைப்பு, நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையிலிருந்து மனம்மாறி இறைாட்சியின் அருகாமை பற்றிய நற்செய்தியை நம்ப வேண்டும் என்பதைப் பற்றியது.

இறையாட்சி எவ்வளவு அருகாமையில் உள்ளது என்ற கேள்வி வந்த போது, "இறையாட்சி கண்களுக்குப் புலப்படும் வகையில் வராது. இதோ இங்கே! அல்லது அதோ அங்கே! எனச் சொல்ல முடியாது. ஏனெனில் இறையாட்சி உங்கள் நடுவிலேயே செயல்படுகிறது" (லூக் 17:21) என்று நமக்குள் இருந்து செயல்படும் இறையாட்சியின் இருப்பை, அதன் செயலாக்கத்தை விளக்கிக் காட்டினார்.

நாம் நமக்கு வெளியே உள்ளவைகளால் உருவாக்கப்படுபவர்கள் அல்ல. நமக்குள் இறைவன் வைத்த இறையாட்சியின் நிஜத்திற்குள் விழித்தெழுந்து அதனை வாழ்வில் நிஜமாக்குபவர்கள். குறிபார்த்து எறிய வேண்டிய இலக்கு நமக்கு வெளியில் இல்லை. அது நமக்குள் இருக்கிறது. நாம் நமக்குள் இறைவன் வைத்த இறையாட்சி ஆற்றலை நோக்கி நம் மனதைத் திருப்பி அதன் செயல்வேகத்தை உணர்ந்து, உணர்ந்ததையே வாழ்வாக வாழ்கின்றவர்கள்.

இறைவன் நாசரேத்தூர் இயேசு நம்மைப் போல் ஒருவராக வாழ்ந்து, நம்மில் துவக்கி வைத்து, இப்போது நம்மையெல்லாம் அந்த இறையாட்சியின் முழுமையை நோக்கிப் புரட்சிப் பயணம் போக அழைக்கிறார். அவர் தொடங்கியப் புரட்சிப் பயணம் நம் ஒவ்வொருவர் வாழ்விலும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. நாம் நமக்குள் இருக்கும் நமது இயல்பாகிய இறைசாயலை, இறைப் படைப்பாற்றலை உணர்ந்து அதனையே வாழ்கின்ற போது இறையாட்சியின் நிஜமாக நாம் மாறுகிறோம்.

வாழ்க்கை என்பது இப்படி நமக்குள் இறைவன் வைத்த இறைசாயலை, இறைவனின் படைப்பாற்றலை வாழ்வது. வாழ்வின் வளர்ச்சி அல்லது வாழ்வின் அன்றாட நிகழ்வு என்பது இயேசு நம்மில் தொடங்கியப் புரட்சிப் பயணமாக அடிமேல் அடி வைத்து நகருவது.

நம் வாழ்க்கை – அது நமக்குள்ளிருந்து நாம் மலரும் புரட்சிப் பயணம்

வாழ்கின்ற செயல் - அந்தப் புரட்சிப் பயணம் நகர நாமெடுக்கும் அடிகள்

இயல்பு வாழ்வு - இறைவன் எனக்குள் வைத்த வாழ்வு

இயல்பை வாழுதல்- எனக்கு நான் என்னிலிருந்து நிறைவாக மலரும் வாழ்வு.

---

# வன்னி மண்ணில் சாட்சியம் இல்லாத சாவுகள் நிறைவேறி ஒருவருட நிறைவு

– வண.அ.சகாயாநாதன் -IVD







வன்னி நிலம் வதை நிலமாகி கொலைக்களமாகி மனித நேயம் மரித்து சரிந்து வீழ்த்தப்பட்டு ஒருவருடம். இறுதி யுத்த காலத்தில் வன்னிமண் எங்கும் வித்துகளாகி புதைக்கவும் விதியின்றி சிதைந்துபோன எம் உறவுகள் வீழ்ந்து எம் மண்ணை முத்தமிட்டு முடிந்து போனது ஒருவருடம். வன்னிப் போரில் எல்லாவற்றையும் இழந்து உறவுகளையும் பறிகொடுத்து தலைவிரிகோலமாக அடைக்கலம் அடைக்கலம் இறைவா! என்று நனைந்து. உடுத்திய அழுக்கு உடையோடு வந்தவர்கள் முள்வேலிக்குள் அடைக்கப்பட்டு ஒருவருட நிறைவு. சர்வதேச நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் கண்டு கொள்ளாமல் போனதால் வன்னிமண் கொலைக்களமாக்கப்பட்டு ஒருவருடம். மிலேச்சத்தனமான தனது நரபலி வெற்றியை தமிழ் மக்களின் செங்குருதியில் நின்றபடி சொந்த மக்கள் மீது கொத்துக்குண்டு போட்டு அழித்து ஒருவருடத்தை வெற்றிகரமாக முடித்துள்ளார்கள். எல்லாம் நிறைவேறியுள்ளது.

எம் மண்ணில் நம்பிள்ளைகள் ஓடி விளையாடிய இடங்கள் சுடு காடாக உள்ளது. ஆண்டவனே ஆண்டவனே என்று ஓடி ஆறுதல் அடைந்த ஆன்மீகம் வளர்த்த கிறிஸ்தவ இந்து ஆலயங்கள் அழிந்துபோயின. நம்பிள்ளைகளுக்கு உயிர் எழுத்து கற்றுத்தந்த பாடசாலைகள் உயிரும் இல்லாம் மெய்யும் இல்லாமல் உருக்குலைந்து கிடக்கின்றன. கொத்துக் கொத்தாக நெல்விளைந்த நிலங்கள் கொத்துக் குண்டுகளால் குழிபறிந்து கிடக்கின்றன. பனைமரங்கள் பழமரங்கள், பயன்தரும் மரங்கள் தறிக்கப்பட்டு காடுகள் அழிக்கப்பட்டு வனாந்தரமாக காட்சி தருகின்றன. வீடுகள் பிரிக்கப்பட்டு, உடைக்கப்பட்டு உடைமைகள் எல்லாம் சூறையாடப்பட்டு வெறுங்கையோடு, கையேந்தி நிற்கக்கூடாத எம்மினம் வீதியில் நிற்கிறது. அரக்கர் மனம் அசையும் என்று இறுதிவரை அழுதது எம்மினம். ஆனால் அழிக்கவென்று புறப்பட்டவனின் காதில் எம் அழுகையின் குரல் கேட்கவில்லை. ஆயிரக்கணக்கில் எம் உறவுகளின் உயிர்கள் பறிக்கப்பட்டன. இறுதி மூச்சுவரை உரிமைக்காக, உயிருக்காகபோராடி மரணித்தவர்களுக்கு வன்னி மண்ணும், கடலும் மட்டுமே மௌன அஞ்சலி செலுத்தின. அக்கறையுடையவர்கள் நடுநிலையாளர்கள், இரக்கமுடையவர்கள் சமய சமூக தலைவர்கள் இப்போரை நிறுத்தி உயிர்களை காப்பாற்றி ஒரு சமரசத்திற்கு வர முயற்சி எடுப்பார்கள் என எல்லாத் தமிழர்களும் எதிர்பார்த்தோம். ஆனால் எங்களால் கையாலாகாத்தன்மை என்று மௌனித்தனர். ஒரு பக்கச்சார்பாக அறிக்கை விடுத்தனர். அவர்களின் மௌனம் பல ஆயிரம் உயிர்களை பலியெடுத்தன. இலட்சக்கணக்கான மக்கள் முள்வேலிக்குள் முடக்கப்பட்டார்கள், அடைக்கப்பட்டார்கள். அதன் பின்புதான் பலரின்கண்கள் திறந்தன, பவனிவந்தார்கள். கருவில் இருந்த குழந்தை தொடங்கி, கல்லறை செல்லவேண்டிய வயோதிபர் வரை உயிரை பறித்த உண்மையை இன்னு(று)ம் இவர்கள் ஏற்றுக்கொள்ளும் நிலையில் ஏனோ இல்லை.

கடவுளின் நீதியான தீர்ப்பு என்றோ ஒரு நாள் உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது. எல்லா மதங்களும் போதிப்பதும் இதுதான். நல்ல மனசு உள்ள மனிதர்களும் உண்டு, அதனால்தான் மனித நேயமும் இன்னும் மயிரிழையில் உயிர் தப்பிப்பிழைக்கிறது. இலை உதிர்வது இயற்கை(யின்) சுழற்சி. வேர்கள் இருப்பதை நாளை இயற்கை மீண்டும் உறுதிசெய்யும். உயிரோடு இருந்து சாதிக்க முடியாததை வன்னியில் செத்துப்போன அத்தனை சடலங்களும் நிச்சயம் செய்யும். எமது மக்கள் இழந்த அனைத்திற்குமான தீர்வு எமக்கு கிடைத்தே ஆகவேண்டும். அவர்கள் சிந்திய இரத்தம், இழந்த உயிர்கள், தொலைந்த சொத்துக்கள் எல்லாவற்றிற்கும் அநீதி இழைத்தவர்கள் ஏதோ ஒருவகையில் பதில் சொல்லி ஆகவேண்டும். அதற்கான நீதி வழங்கும் காலம் நெருங்கிவிட்டது. பொய்மையின் பயணம் வேகமானது. உண்மையின் பயணமோ மெதுவானது. காயங்கள் நிறைந்தது. ஆனால் உறுதியானது. என்றேனும் ஒரு நாள் பொய்மையின் குப்பை மேடுகளின்று உண்மை உயிர்த்தெழும், வெற்றிபெறும். ஒரு செம்மறியின் இரத்தம் பூமியை சுத்தம் செய்துகொண்டது. உயிர்போகும் நிலையிலும் உறவை மையப்படுத்தும் நட்பு, விரக்தியின் உச்சக்கட்டத்தில் வேதனைப்பட்டாலும் எழுச்சிபெற முயன்றார். கைவிடப்பட்டதாக உணர்ந்த போதும் உயிரின் உள்ளாழத்தில் இருந்து உரிமையோடு "என் இறைவா என் இறைவா எனக் கூறி உயிரைக் கையளித்தார்". மன உறுதி கொண்ட மனிதனுக்குத்தான் மேற்கண்ட தீர்க்கமான தீர்மானங்களை இக்கட்டான, இடிபாடான சூழலிலும் இயல்பாக எடுக்க முடியும். முடிவாக முள்ளிவாய்க்காலில் இறுதி நேரத்தில் பல ஆயிரம் உயிர்கள் பலியாக்கப்பட்டன. பின்பு தமிழர் வாழ்வு வெறுமையாக்கப்பட்டது. வெறுமையிலிருந்து தான் புதிய வாழ்வை பிறப்பிக்கவேண்டும். தடை முகாம்களிலும் அகதிமுகாம்களிலும் இருப்பவர்களை வெளியேயெடுத்து நாம் உயிரோடு இருக்கிறோம், அதே உணர்வோடு இருக்கின்றோம், அதே வீரியத்தோடு இருக்கின்றோம் என சர்வதேசத்திற்கு உறுதிப் படுத்துவோம். கண்ணீரை துடைத்தெறிந்து விட்டு உறுதியோடும் நம்பிக்கையோடும் உண்மை போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ஒவ்வொருவரும் முன்வருவோம். தர்மங்களுக்கு தோல்வியில்லை, நியாயங்களுக்கு வீழ்ச்சியில்லை. முயற்சிகள் வீண்போவதில்லை. தர்மங்களும், நியாயங்களும், முயற்சிகளும் இலக்கை நோக்கியே செல்லும் என்பதை வாழ்வாக்கிக் கொள்வோம். நீதிக்காக நேற்று உயிர் நீத்தவர்களின் கல்லறைகள் இன்றைய நமது முயற்சிக்கு உரமூட்டும் நினைவுச்சின்னங்கள் ஆகின்றன. வாழ்வின் இடிபாடுகள் இன்னொரு வளர்ச்சிக்கு அடித்தளங்கள் ஆகின்றன.

இறுதியாக, படுகொலை செய்யப்பட்ட முன்னணி பத்திரிகையாளர் லசந்த விக்கிரமசிங்க தனது கடைசி தலையங்கத்தில் ஒரு எச்சரிக்கை விடுத்தார். "தமிழர் பகுதிகள் முழுவதையும் கைப்பற்றிவிடலாம். போராளிகளை நசுக்கிவிட்டதாக அறிவிக்கலாம், இந்த வெற்றியைக் கொண்டாடலாம். ஆனால் தங்களது தாய் மண்ணிலிருந்து விரட்டப்பட்டவர்கள் மீண்டும் எழும்போது முன்னிலும் வலுவாக எழுவார்கள்" என்றார். இக்கூற்று நிறைவேறும். நிறைவேறவேண்டுமானால் நிலத்திலும், புலத்திலும் உள்ள தமிழர்களாகிய நாம் எமது இலக்கை நோக்கி ஒற்றுமையாக சேர்ந்து செயற்படுவோம். ஆயுதபோராட்டம் வெறுமனே சாதனை எதுவுமின்றி மௌனிக்கவில்லை. மாறாக எமது பிரச்சனைகளை உலகமயப்படுத்தி விட்டே மௌனித்திருக்கிறது. அந்த இடத்திலிருந்து சாத்வீகமுறையில் போராட்டத்தை தொடரவேண்டிய கடமையும், பொறுப்பும் எல்லா தமிழருக்கும் உண்டு. வன்னி மண்ணில் இறந்தவர்களுக்காக மறக்காமல் செபிப்போம். உயிர்ப்பார்கள் என்பதில் நம்பிக்கை கொள்வோம்.

# குருத்துவம் ஒரு வரலாற்றுப் பார்வை

தொகுப்பு அருட்பணி. நெவின்ஸ் யோகராச்

சென்ற மாத தொடர்ச்சி ........

## இடைக்காலம் (கி.பி.700 – 1500 நூற்றாண்டுகள்)

கொன்ஸ்தாந்தின் காலத்திலிருந்தே அரசும் சமயமும் இணைந்து செயற்பட தொடங்கியது வரலாற்று உண்மை. எதிரும் புதிருமாக இருந்த உரோமை பேரரசும் திருச்சபையும் கைகோர்த்து செயற்பட தொடங்கியது. அரசருக்கு ஆதரவளிக்கும் பொறுப்பைத் திருச்சபை தலைவர்கள் ஏற்றுக்கொள்ள திருச்சபையின் ஒற்றுமையையும் அதன் பல்வேறு நலன்களையும் பாதுகாக்கும் கடமையை அரசர் ஏற்றார். காலப்போக்கில் அரசியலும் சமயமும் இன்னும் நெருக்கமாக ஒன்றித்து விட்டன. பேரரசர் சார்லஸ் மன்னராக முடிசூட்டிய பின்னர் கிறிஸ்தவர் அல்லாத மக்களை வென்று அவர்களது பகுதிகளைக் கைப்பற்றி அவர்களை கிறிஸ்தவர்களாக மாற்றுவதில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டார். இவ்வாறு மேற்கு ஐரோப்பாவின் பெரும் பாகம் அவரது ஆட்சியின் கீழ் வந்தது. இவ்வாறு திருச்சபையில் அரசர்களின் தலையீடு அதிகரித்தமையினால் திருப்பணியிலும் பல மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தது.

திருச்சபைத் தந்தையர்களின் காலத்தில் ஆயரே திருச்சபையின் தலைவராக செயற்பட்டார். தலத்திருச்சபையின் பொறுப்புக்கள் அனைத்தும் அவரிடமே குவிந்து கிடந்தன. அவரே திருத்தொண்டர்களையும் குருக்களையும் நியமித்தார். ஆனால் இடைக்காலத்தில் ஆயர்களுக்கும் குருக்களுக்கும் இடையில் நிலவிய உறவில் அதிக இடைவெளி ஏற்பட்டது. இதற்கு முக்கிய காரணம் அன்று உரோமைப்பேரரசில் பெரும்பாலான கிராமப்புற பங்குளின் சொத்துக்களும் நிலபுலன்களும் பிரபுக்கள் கைகளில் இருந்தன. நிலபிரபுக்களே சில ஊர்களில் பங்குளை ஏற்படுத்தினர். நிர்வாகப்பொறுப்பு ஆயரிடமிருந்து நிலபிரபுக்களின் கைகளுக்கு மாறியதால் குருக்களும் நிலபிரபுக்களின் சொல்லுக்கும் செயலுக்கும் கட்டுப்பட்டு பெட்டிப்பாம்புகள் போல் செயற்படத்தொடங்கினர். அவர்கள் ஆயர்களை பெரிதாக கண்டுகொள்ளவில்லை. குருக்களை திருநிலைப்படுத்துவதோடு ஆயரின் கடமையும் பொறுப்பும் முடிந்தது. மேலும் நிலபிரபுக்கள் தங்கள் அதிகாரத்திற்கு அடிபணிந்தவர்களையே பங்கு குருக்களாக நியமித்தனர்.

## மறுமலர்ச்சிக்காலம் (கி.பி 1600 – 1900)

இடைக்கால திருச்சபையில் மூடநம்பிக்கைகளும் அர்த்தமற்ற சடங்குகளும் நிர்வாக சீர்கேடுகளும் அரசியல் தலையீடுகளும் தலைவிரித்தாடின என்பது வரலாற்று உண்மை. திருச்சபையில் மாற்றமும் மறுமலர்ச்சியும் தேவை என்ற குரல் ஆங்காங்கே ஓங்கி ஒலிக்கத்தொடங்கின. இதற்கு செயல் வடிவம் கொடுத்தவர்கள் மார்ட்டின் லூத்தர், ஜோன் கல்வின், உல்றிக் சுவிங்கிலி ஆகிய மறுமலர்ச்சியாளர்கள். இவர்கள் அன்று குருக்கள் செய்துவந்த அருளடையாளப்பணிகளையும் அதற்கு இறையியல் வல்லுநர்கள் தந்த விளக்கங்களையும் நிராகரித்தனர். பணிக்கான அதிகாரம் குருக்களுக்கு ஆயரிடமிருந்தும், ஆயர்களுக்கு திருத்தந்தையிடமிருந்தும், திருத்தந்தைக்கு கிறிஸ்துவிடமிருந்தும் வருகின்றது என்பதை திட்டவட்டமாக மறுத்தனர்.

## மார்ட்டின் லூத்தர் (கி.பி 1486 – 1546)

மறுமலர்ச்சியாளர்களில் முதன்மையானவரான மார்ட்டின் லூத்தரின் முக்கிய இறையியல் கருத்து, இறை நம்பிக்கையால்தான் ஒருவர் இறைவனுக்கு ஏற்புடையவராகிறார் என்பதாகும். கடவுள் தம் திருமகனின் பாடுகளையும் இறப்பையும் முன்னிட்டு மனிதர்மீது இரக்கம் கொண்டு அவர்களை மீட்கிறார். மனிதர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு இறைவனிடம் சரணடைவதே மீட்பு பெறுவதற்கான ஒரே வழி. மீட்பு பெற இறை நம்பிக்கையும் விவிலியமும் மட்டுமே போதும் இதனால் வெளிச்சடங்குகளான அருளடையாளங்கள் அர்த்தமிழந்து விடுகின்றன. இப்படியான இறையியல் சிந்தனைப்பின்புலத்தில் மார்ட்டின் லூத்தர் குருத்துவம் பற்றி பல கருத்துக்களை வெளியிட்டார்.

1. குருத்துவம் ஓர் அருளடையாளம் அன்று. ஏனெனில் இயேசு அதை அருளடையாளமாக நிறுவவில்லை. திருப்பணியை ஒரு அருளடையாளமாக மாற்றியது உரோமைத் திருச்சபையே.
2. தொடக்கத் திருச்சபையில் பணியாளர்கள் கிறிஸ்தவ சமூகங்களின் மேய்ப்பர்களாக விளங்கினார்களேயன்றி திருப்பலி நிறைவேற்றும் குருக்களாக அல்ல.
3. நற்கருணை, கல்வாரிப்பலியின் நினைவாக்கம் அன்று. கிறிஸ்து ஒரே ஒரு முறை கல்வாரியில் நிறைவேற்றிய பலி மாந்தர் அனைவருக்கும் நிறைவான விதத்தில் மீட்பு தரும் நிகழ்ச்சியாதலால், அதை திரும்பவும் நிறைவேற்றக்கூடாது.
4. 1 பேது 2: 5,9 ஐ அடிப்படையாகக் கொண்டு இறைமக்கள் அனைவரும் திருமுழுக்கினால் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கேற்கின்றனர். எல்லோருமே அரச குருத்துவத் திருக்கூட்டம் என்பதால் சடங்குக் குருத்துவம் தேவையில்லை.

## திரிதெந்தின் பொதுச் சங்கம் (கி.பி 1545 – 1563)

16 ஆம் நூற்றாண்டில் மறுமலர்ச்சியாளர்கள் முழங்கிய புரட்சிமிகு கருத்துக்களும் சிந்தனைகளும் நாளடைவில் திருச்சபையில் மிகப்பெரிய பிளவை ஏற்படுத்தின. எங்கும் குழப்பமும் அதிருப்தியும் நிலவிய காலகட்டத்தில் திருச்சபையை ஊடுருவி இருந்த சீர்கேடுகளை வேரறுக்கவும் சர்ச்சைக்கு உள்ளான மறைக்கோட்பாடுகளுக்கு விளக்கங்கள் தரவும் திரிதெந்தின் பொதுச்சங்கம் முயன்றது. இச்சங்கம் மறுமலர்ச்சியாளர்களின் கருத்துக்கள் அனைத்தையும் நிராகரித்தது.

1. குருத்துவம் ஓர் அருளடையாளம். அதை நிறுவியவர் கிறிஸ்து. அவரே இறுதி உணவின்போது திருத்தூதர்களை குருக்களாக ஏற்படுத்தினார். திருத்தூதர்களுக்கும் அவர்களது வழிவருபவர்களுக்கும் திருப்பலி நிறைவேற்றவும், ஒப்புரவு வழங்கவும், மற்ற அருளடையாளங்களை நிறைவேற்றவும் அவரே அதிகாரம் அளித்தார். குருத்துவ திருநிலைப்பாட்டின் போது குருக்கள் அழியா முத்திரையைப் பெறுகின்றனர். அவர்கள் என்றென்றும் குருக்களாக விளங்குகின்றனர்.
2. நற்கருணை புதிய உடன்படிக்கையின் பலி என்பதை சங்கம் ஐயம்திரிபற நிலைநாட்டியது. ஆதலால் ஒவ்வொரு நாளும் திருப்பலி நிறைவேற்றுவது குருக்களின் தலையான கடமை. இதற்காகவே இயேசு குருத்துவத்தை அருளடையாளமாக நிறுவினார். மற்ற அருளடையாளங்களையும் குருக்கள் திருச்சபையின் விதிமுறைகளுக்கேற்ப நிறைவேற்ற வேண்டும்.

## சங்கத்தின் பிற்பாடு தொடர்ந்தவை

திரிதெந்தின் சங்கம் தந்த பரிந்துரையின் அடிப்படையில் குருத்துவ வாழ்வையும் பணியையும் புதுப்பிப்பதில் சில திருத்தந்தையர்கள் மிகத்தீவிரமாக ஈடுபட்டனர். திருத்தந்தை 5 ஆம் பயஸ் (1556 – 1572) குருக்கள் அன்றாடம் சொல்ல வேண்டிய திருப்புகழ் மாலையை சீர்ப்படுத்தினார். மறைக்கல்வியில் அவர்கள் ஈடுபாட்டை வலியுறுத்தியதோடு அதற்காக ஒரு மறைக்கல்வி ஏட்டையும் வெளியிட்டார். உரோமைத் திருப்பலி நூலும் வெளிவந்தது. 16 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளில் பல புதிய துறவசபைகள் தொடங்கப்பட்டன. இச்சபைகளைச் சார்ந்த குருக்கள் பலர் நற்செய்திப் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்தனர். கடல் கடந்து தொலைதூர நாடுகளுக்குச் சென்று இறைவார்த்தையைப் போதிப்பதிலும் திருமுழுக்கு அளித்து மக்களை மனந்திருப்புவதிலும் அயராது ஈடுபட்டனர். மரபு பணியோடு வறியவர்களுக்காகவும் நலிவுற்றவர்களுக்காகவும் கல்விக்கூடங்களையும் மருத்துவமனைகளையும் சமூகப்பணித்தளங்களையும் அமைத்து பல அறப்பணிகளையும் குருக்கள் செய்தனர். இருப்பினும் சமூகப்பணிகள் திருப்பணிகளாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. குருத்துவமும் குருத்துவப்பணியும் மரபுப்பார்வையில்தான் புரிந்துகொள்ளப்பட்டது. அதாவது ஒரு இலட்சியக்குரு எப்பொழுதும் குருவுக்குரிய அங்கி அணிந்திருப்பவராகவும், ஆன்மாக்களை மீட்பதில் அக்கறை கொண்டவராகவும், வழிபாட்டு நெறிகளுக்கேற்ப அருளடையாளங்களை நிறைவேற்றுபவராகவும், இறைவேண்டலில் ஈடுபாடு கொண்டவராகவும் இருப்பார். அத்தோடு பணம், பதவி , பாலின்பம் போன்றவற்றில் மட்டும் நாட்டம் கொள்ளாதவராகவும் கருதப்பட்டார். இதனால்தான் திருப்பணியாளர்கள் அரசியலில் பங்கேற்பதும் சமூக விடுதலைக்காக போராடுவதும் திருச்சபையால் தடை செய்யப்பட்டது.

வளரும்.....

## உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி - 83.

இவ்வாரம் நாம் கொலோசையருக்கு எழுதிய திருமுகத்தில் இருந்து வினாக்களை தொகுக்கின்றோம். இத்திருமடலும் நான்கு அதிகாரங்களாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைப் புனித பவுல் சிறையிலிருந்து கி.பி. 70ம்-80ம் ஆண்டுகளில் எழுதியபடியால் இவை சிறைமடல்களாக எண்ணப்படுகின்றன. இம் மடல்கள் பவுலின் வழிநடாத்தலில் அவரின் சீடர்களில் ஒருவரால் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருத்துத் தெரிவிக்கும் அறிஞர்களும் இருக்கின்றார்கள்.

கொலோசையா சின்னாசியாவில் மேற்குப் புறமாக உள்ள எபேசு நகருக்கு அண்மையில் இருந்த ஒரு நகரம். இது சனச் செறிவும் பலவிதமான மதக் கொள்கைகளும் கொண்டு போலிப் போதகர்களினால் வழிநடாத்தப்பட்டு வந்திருக்கின்றது. தவறான கொள்கைகளைக் கண்டித்து கிறீஸ்துவைக் கடவுளின் திருமகன்; கிறீஸ்து இல்லாமல் கிறீஸ்தவர்களாக வாழமுடியாது என நிறுவுவதற்காக இத்திருமுகம் எழுதப்பட்டிருக்கின்றது.

கொலோசையா நகருக்கு புனித பவுலடியார் நேரடியாகச் சென்று நற்செய்தி அறிவிப்புச் செய்யவில்லை. அவர் எபேசில் இருந்தபோது தமது துணையாளர்களில் ஒருவரான எப்பப்பிரா என்பவர் மூலமாக நற்செய்தி அறிவிப்புப் பணி செய்தார்.

புனித பவுல் தனது நற்செய்திப் பணியில் நல்லதொரு வலையமைப்பை பேணி வந்தார். மூன்று தூதுரைப் பயணங்களை பல்லாயிரக்கணக்கான மைல்கள் கடல் தரை மார்க்கமாக இறைவனின் துணையோடு செய்த புனித பவுல் அடியார் தான் அறிவித்த நற்செய்தி வாழ்வு வாழப்படுகின்றதா என்பதை பல்வேறு வழிகளில் உறுதிப்படுத்திக் கொண்டார். ஊக்குவிப்பதற்கும் கண்டித்துத் திருத்துவதற்குமான பணியின் பலாபலன்களே இத்திரு முகங்கள் அல்லது தூதுரை மடல்கள்.

**இனி நமது வினாக்களுக்கு வருவோம்.**

1. "இவை இரண்டும் விண்ணகத்தில் உங்களுக்கென வைக்கப்பட்டிருக்கும் நன்மைகளை எதிர் நோக்குவதால் விளைந்தவை" என பவுலடியார் எந்த இரண்டைப் பற்றிக் கூறுகின்றார்?
2. கொலோசையருக்கு நற்செய்தியை அறிவிப்பதற்காக புனித பவுலடியார் அவர்களால் அனுப்பப்பட்ட உடன் உழைப்பாளி யார்?
3. நாம் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவர்களானால் எவற்றை நாடும்படி புனித பவுல் நமக்குச் சொல்லுகின்றார்?
4. கீழ்ப்படியா மக்கள் மீது சினத்தைக் கொண்டு வருபவை எவை?
5. நாம் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள். என்ன பண்புகளால் நம்மை அணிசெய்ய வேண்டும்?
6. நாம் எவற்றை எவ்விதம் பா[illegible] கடவுளைப் போற்ற வேண்டும்?
7. திருமணமான பெண்கள், கணவர், பெற்றோர், பிள்ளைகள் ஆகியவர்களுக்கு பவுலடியார் கூறும் அறிவுரை என்ன?
8. புனித பவுல் தங்களுக்காகவும் வேண்டுதல் செய்யும்படி கொலோசையரைக் கேட்கின்றார். எதற்காக?
9. புனித பவுல் எதற்காகச் சிறைப்பட்டிருப்பதாகக் கூறுகின்றார்?
10. இத்திருமுக நிறைவில் புனித பவுல் தன்னோடு இணைந்து பணியாற்றும் பலரைக் குறிப்பிடுகின்றார். அவர்கள் யார்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 81 இற்கான கேள்விகளுக்கு 46 பேர் விடையளித்திருந்தனர்

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

### க. ரகுநாதன்

**மன்/அடம்பன்.ம.ம.வி. மன்னார்.**

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. செல்வி. கிரன், அப்போஸ்தலிக்க கார்மேல் நவசன்னியாச மடம், கம்பஹா.
2. யே. றொகாந்தி, பிடாரிகுளம், முருங்கன்.
3. செலஸ்தின் கனிஸ்ரன், ஓமந்தை மத்திய கல்லூரி, வவுனியா.
4. பி. இந்துஜா பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார்.
5. அ. றொணிக்கா குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை
5. சூ. இராக்கினி லீனா, மரியாள் வீதி, தாழ்வுபாடு.
7. பீ. நியோமி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
8. செ. மேரி நி[illegible]ஜா (றொசானி), கன்னாட்டி, அடம்பன்.
9. அ. ஜேம்சன், புனர்வாழ்வு நிலையம், வலயம் - 01, மன்னார் வீதி, பம்பைமடு, வவுனியா.
10. ச. சிறோமி, கற்கிடந்தகுளம், முருங்கன், மன்னார்.
11. அருட்சகோதரி பவித்ரா, கார்மேல் மடம், கொழும்பு – 10.

## உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி - 81 இற்கான சரியான விடைகள்

**எபேசியர் 3-5**

1. நற்செய்தி வழியாக (3:6)
2. கடவுளை உறுதியான நம்பிக்கையோடு அணுகும் உரிமையும் துணிவும் நமக்குக் கிடைத்துள்ளது. (3:12)
3. அன்பு (3:1)
4. முழுமனத் தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்கி அன்புடன் இணைந்து வாழ்வது (4:2)
5. வானுலகுக்கு ஏறிச் சென்ற கிறிஸ்துயேசு (4:10)
6. தூய ஆவியானவர் (4:30)
7. பரத்தமையில் ஈடுபடுவோர், ஒழுக்கக் கேடாக நடப்போர், சிலை வழிபாடாகிய பேராசை கொண்டோர் (5:5)
8. பயனற்ற இருளின் செயல்களைச் செய்கிறவர்களோடு உறவு வேண்டாம் என்று கூறுகின்றார் (5:11)
9. கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் உவமானமாகக் காட்டி விளக்குகின்றார்.
10. உண்மை : இடைக்கச்சை
    நீதி : மார்புக் கவசம்
    ஆயத்த நிலை : மிதியடி
    நம்பிக்கை : கேடயம், மீட்பு : தலைச்சீரா
    கடவுளின் வார்த்தை: போர்வாள்

# கலை இலக்கியச் சாரளம்

## கவிதை களம்

### அகதி வாழ்வு



அகதி என்ற சொல்லினையே
அகராதியில் இருந்து நீக்கி
அன்புள்ளம் கொண்டோராய்
அகிலத்தில் வலம் வருவோம்

உண்ண உணவின்றி
உடுத்த உடையின்றி
உதவ யாருளர் என்று
உருகுகின்ற மெழுகாக
இன்று எத்தனை திரிகள்

நிவாரண பொருட்களை நம்பிக்கொண்டு
நிம்மதியற்ற வாழ்வு வாழ்ந்து
நித்தம் நித்தம் துடிக்கின்ற - இந்
நிலை எப்போது மாறிடுமோ

பள்ளி செல்ல முடியாத நிலை
பசியால் துடிக்கின்ற குழந்தை – அதைப்
பார்த்து தவிக்கின்ற தாய்
பரமனே! இவ் அகதி வாழ்வு அகலாதோ?

பெல்மன்ராஜன் ஆன்மேரி,
7ம் வட்டாரம், விடத்தல்தீவு.

### அழுகுரல் கேட்கின்றதா?

கண்ணீர் எனும் கடலிலே
காகித ஓடமாய் கரைந்து விட்டது
நம் வாழ்வு
ஓராயிரம் கனவுகளுடன் அல்லவா
விடுதலைக்காய் காத்திருந்தோம் - ஆனால்
அத்தனையும் கானல் நீராய்
ஓடி மறைந்து விட்டது.

நெஞ்சிலே தாங்கொணா சுமைகளையும்,
உடலிலே மாறாத வடுக்களையும்
அல்லவா சுமந்து கொண்டிருக்கின்றோம்

மடி மீது தாலாட்டிய அன்னையவள் -ஒரு
மணி நேரத்திற்கு அதிகம் பேச முடியாதாம்
தோள் மீது சீராட்டிய தந்தையை
தோண்டித் துருவி ஆராய்ந்த பின்தான்
தோற்றம் காண விடுகின்றார்கள்
பாச மழை பொழிந்த பண்பான
உறவுகளுக்கு
"பாஸ்" எனும் நடைமுறை வைத்து
பாதி வழியிலே திருப்பியனுப்புகின்றார்கள்

இத்தனையும் பொதுப் பாதுகாப்பு
எனும் பெயரில் - பொல்லாப்புக்களை
அனுபவித்துக் கொண்டிருக்கும்
என்னைப் பார்க்க வருவதற்குதான்

முட்கம்பி வேலிக்குள்
முடங்கிக் கிடக்கும் - எங்களின்
முகத்தினில் குத்தியிருக்கும்
முத்திரையை அகற்ற முன் வரக்
கூடியவர்கள் யார்?
பகடைக் காய்களாக எம்மை
வைத்து – பணத்தைப் பெறுகின்ற
பாதகர்களின் முகத்திரையை கிழிப்பது
எப்போது?

முகவரிக்காய் ஏங்கித் தவிக்கும் போது
முறைத்துப் பார்க்கும் முறையில்லாத
மனிதர் நடுவே – முகாரியாய்
ஒலித்தோய்கின்றது நம் இதயத்துடிப்பு
எஞ்சியிருக்கும் எம் குருதி நாடியும்
மிஞ்சியிருக்கும் சுவாசமும்
கல்லாக உறைந்து காற்றுடன் கரையுமுன்
கெஞ்சிக் கேட்கின்றோம் உங்களை
கொஞ்சி மகிழும் உறவுகளிடம் கொடுத்து
விடுங்கள் எங்களை

உங்களின் உடன்பிறப்புக்கள்

### தவிப்பு

பழக்கப்பட்ட முகாம் வாழ்வு
பாழாய்ப் போனதே கல்விக் காலம் என
கண்ணீர் மல்க காத்திருக்கின்றோம்
நாட்புறமும் முட்கம்பி வேலிக்குள்
முகவரிகளைத் தேடியவர்களாய்
இலக்குகளையும் ஆசைகளையும்
புனர்வாழ்வாகவே கடத்தி வருகின்றோம்
பிறந்தது தொடக்கம்
பிரிவுகளையே நிரந்தரமாய் பிரியம் கொண்ட
பிசாசுகளின் மழலைகள் நாங்கள்
சோகங்கள் தான் எங்கள்
முகவரியாய் மாறிவிட்டதா?
இன்பங்களை இழந்த இலவுகாத்த
கிளிகளைப் போல் இன்றுவரை ஏங்குகிறோம்
ஆற்றுவதற்கும், ஆறுதல் தருவதற்கும்
யாருமற்ற ஏதலிகளாய் நாங்கள்
வெளிச்சம் தேடும் முகங்களாக - இன்று
ஏங்குகின்றோம் நாங்கள்

சண்முகம் ஜெனார்த்தனன்,
மத்திய கல்லூரி, ஓமந்தை.

### வேண்டுதல்



பரபரப்புடன் விடிந்த
வழமையான அந்த
அவலந்தரும் பொழுதொன்றில்
வைத்திய சேவை நாடி
வந்து கொண்டனர் பலர்
அவலங்களும் ஓலங்களும்
உயிரின் துயரங்களும்
ஏறு வரிசையில் நீண்டு சென்றன

இதயத்திற்கு நேரே இறுகிக் கிடந்தது
ரவை ஒன்று - அதை
தாங்கி வந்த சிறுமி
பரிதவித்துப் போனாள்
இயேசுவே - மாதாவே
என்றபடி அவள் அன்னை
அருகிருந்து துடித்தாள்



மயக்க மருந்தில்லை - கால
அவகாசமும் இருக்கவில்லை
விறைப்பு மட்டும் தான்
அன்பாக அவளிடம்
பேச்சுக் கொடுத்தபடி
வெளியே ரவையை வெட்டி எடுத்தபின்
இயேசுவை உச்சரித்தாள்
வலியிலும் புன்னகைத்தாள்

பிஞ்சு இதயம் சிதைத்து
உயிரை அழிக்க வந்த
ரவையை எய்தவனை
மனந்திரும்ப வேண்டுமென்று
மனதிருத்தி வேண்டினேன்

யூலியஸ், தோலகட்டி.

### முடிவு



கடையில் பொம்மைக்கு
உயர் ரக ஆடைகள்
வீதியில் குழந்தைகள்
கந்தல் துணியோடு
ஒவ்வொரு முறையும் ஓட்டுப்போட்டு
கை விரலை கறையாக்கியது தான் மிச்சம்
கடைசிவரை கரையேராமல்
தவிக்கும் எம்மின மக்களின்
முடிவு தான் என்ன?

ஆசீர்வாதப்பர் நவீன் போல்,
ஓமந்தை மத்திய கல்லூரி.

### அன்பே உருவான அன்னை தெரேசா

மக்களுக்கு சேவை செய்வதே
தனது பணியென வாழ்ந்து
காட்டியவர் அன்னை தெரேசா
இவளது உள்ளமோ குழந்தை உள்ளம்

ஏழைகளுக்கு சேவை செய்ய வேண்டும்
அகதிகளுக்கு உதவி புதிய வேண்டும்
அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்க
வேண்டும் என்றே விரும்பியவள்
எளிமையின் சிகரமாக விளங்கினாள்
எம் அன்னை தெரேசா

இவள் பல பரிசுகளையும் பெற்று
பாராட்டப்பட்டுள்ளார்
அன்புதான் வாழ்க்கை அன்பே கடவுள்
என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்தவள்
அன்னை தெரேசா




தியாகத்தின் காரணமாக சரித்திரம்
படைத்த சாதனைப் பெண்களில்
ஒருவராக விளங்குகிறாள்
அன்னை தெரேசா.

இ. டயானி, மடுக்கரை,நானாட்டான்.

## சிறுகதை

### தற்பெருமை

அ. ஜஸ்மின் ஷறோன்,
ஆவணம், நானாட்டான்.







அந்த மணிக்கோபுரத்தின் மேல் உச்சியில் ஐந்தாறு புறாக்கள் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடாத்திக் கொண்டிருந்தன. அதில் ஒரு புறா எல்லோரையும் விட தான் பெரிய ஆளாக வேண்டும் என்ற தற்பெருமையில் இருந்தது. அந்த புறாவைப் பார்த்து பாம்பு கேட்டது.

"உன்னை மனிதர்கள் சமாதானத்தின் சின்னமாகவும், அமைதியின் வடிவமாகவும் ஏற்றுக் கொண்டிருக்கும் போது நீ மட்டும் உன் இனத்தை சேர்ந்தவர்களை புறம்தள்ளி நீ மட்டும் வாழ நினைப்பது நல்லதோ?" என்று கேட்டது. "மனிதர் என்ன சொன்னால் எனக்கென்ன? நான் செய்வதை செய்யாமலா விடப்போறன்" என்றது அப்புறா. பாம்பு சொல்லுமட்டும் சொல்லியது. புறாவோ அலட்சியப்படுத்தியபடி செவிகொடுக்கவில்லை. அது அலட்சியமாக பறந்து சென்றது.

தன்மையாகச் சொல்லியும் என்னை மதிக்கவில்லை இதற்கு செயல் மூலமாகத்தான் காட்ட வேண்டும் என்று மனதிற்குள் எண்ணிய பாம்பு ஒவ்வொரு நாளும் அந்த புறாக்கூட்டத்தில் உள்ள அத்தனை முட்டைகளையும் குடித்து வந்தது. ஆனால் அந்த புறாவோ மற்றைய புறாக்கள்தான் செய்திருக்கவேண்டும் என்று அவற்றை திட்டி தீர்த்து வந்ததோடு நில்லாமல் ஒவ்வொன்றாக வஞ்சகமாக கொன்றொழித்தது. தொடர்ந்தும் பாம்பு தன் கைவரிசையைக் காட்டியது. யார் தன் முட்டைகளை இன்னும் குடிக்கிறார்கள் என்று அறிய அப்புறா அங்கும் இங்கும் அலைந்து விடை கிடைக்காது சோர்ந்தது. திரும்பி வருகையில் புறாக் கூண்டில் பெரிய கரு நாகம் இருந்தது. புறா திகைத்துப் போய் 'என்ன நண்பரே! என் கூட்டில் நீர் ...." என்றது. அதற்கு பாம்பு இது உன் கூடா? இல்லையே கடவுள் எல்லாவற்றையும் எல்லோருக்கும் சமமாகத்தானே படைத்தார். நீ மட்டும் எப்படி சொந்தம் கொண்டாடுவாய்? என்று வியாக்கியானம் பேசியது. புறா வருத்தத்துடன் "நான் எனக்கென்று உரிமை கொள்ள வாரிசுகள் கூட எனக்கு கிடைக்கவில்லை. எனக்கென்று ஓர் இனம் இல்லாமல் போய்விட்டது. இனி நான் என்ன செய்வது? இந்த கூடும் இல்லாவிட்டால் எங்கு போவது?" என்றது.

பாம்பு சிரித்துக் கொண்டே!

"மற்றவர்களை அநியாயமாக துன்புறுத்தி அதில் இன்பம் காணாதே. பிற்காலத்தில் அவர்கள்பட்ட வேதனையிலும் இரட்டிப்பான வேதனையை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதன் அர்த்தத்தை பட்டறிவாய் உணர்ந்து கொள்" என்றது. அப்போது புறா பாம்பின் குரலுக்கு செவிமடுக்காமல் பாவத்தின் பாதாளத்தை நோக்கிப் பயணமானது.

பாம்பு கொஞ்சம் பொறுமையோடு சொன்னது, "நானுனக்கு தண்டனை வழங்கமாட்டேன். நீயே உனக்கான தண்டனையை தெரிவு செய்துள்ளாய்" என்று கூறி புற்றினுள் சென்றது. புறா அங்கும் இங்கும் அலைந்து நிம்மதியின்றி கொடிய விலங்கின் கூரான பற்களுக்கு இரையானது.

"நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ!
அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்!"

### பொன் மொழிகள்

- அறிவைப் பயன்படுத்தி தம் அறியாமையை ஒப்புக்கொள்வது தான் உண்மையான அறிவின் சாராம்சம்.
- கோபமாக பேசும் போது அறிவு தான் முகத்துக்கு திரையிட்டு கொள்கிறது.
- சிரிக்கத் தெரியாதவன் வாழ்க்கையை அனுபவிக்க தெரியாதவன்.
- சத்தியம் மேலானது அதைவிட மேலானது சத்தியமாய் நடப்பதாகும்.
- பிழையை எடுத்துக் காட்டாமல் விடுவது அறிவுத்துறையில் ஒழுக்கமின்மையை ஆதரிப்பதாகும்.
- மனச்சாட்சிக்கு துரோகம் இழைப்பவன் மிருகத்தையும் விடக் கொடியவன்.

லோ. மேரி ஜான்சிகா, சங்கானை வீதி, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.

### யாரிடம் சொல்வேன்

கடல் தன் சோகத்தை அலையிடம்
கூறுவதால்
அலை அதை கரையிடம் கூறுகின்றது
வானம் தன் சோகத்தை மழையிடம்
கூறுவதால்
மழை அதை மண்ணிடம் கூறுகின்றது
என் சோகத்தை நான் யாரிடம் சொல்வேன்
சொன்னாலும் பயனில்லை என்பதை
உணர்ந்தேன்
இது தான் விதி என்று என் வாழ்க்கை
சொன்னது
உள்ளே இருட்டு வெளியே வெளிச்சம்
எந்நிலை என்னை சூழ்ந்தாலும்
என் வாழ்வில் உயர்வு வேண்டும்
ஆயிரம் தடைக் கற்கள் வந்தாலும்- அதில்
ஒன்றேனும் உயர்படிக்கல்லாக அமையும்
என்பதை எண்ணி என்னைத் தேற்றினேன்.

அ. மேரி கொண்செப்ரா,
மடுகோவில், மடு.

### விடுதலை கிடைக்குமா?



என்று விடுதலை கிடைக்கும்
என்று உறவுகளைக் கண்டு
என்று என் துன்பத்தை மறந்து
என்றோ ஓர் நாள்
என் பழைய நிலை வரும்
என்று நினைத்துக் கொண்டு
முகவரி தெரியாத வாழ்வை
எத்தனித்துக் கொண்டு
நாலுபக்கமும் முட்கம்பி
வேலிக்குள் நாள் தோறும்
மீள முடியாமல் அடைபட்டு வாடும்
எங்களுக்கு என்றாவது ஓர்
நாள் விடுதலை கிடைக்குமா?

சேசையா மெரிஸ்ரன்,
(தர்சன்)
மத்திய கல்லூரி, ஓமந்தை.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.96 எசேக்கியேல் 17-24

உங்கள் விடைகளை 15.07.2010க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | ★ | | | | 04 | |
| | | 05 | | | | | | 06 | | |
| | | ★ | 07 | | | | | | | |
| | 08 | | | | | | 09 | | | |
| | | 10 | | | | | | | ★ | |
| | | ★ | 11 | | | | | | | |
| 12 | | | | | | | | | | |
| | | 13 | ★ | | | | | 14 | | |
| | | | ★ | 15 | ★ | | | | 16 | |
| | | | | | | 17 | | | | 18 |

## இடமிருந்து வலம்

1. எகிப்தின் தெய்வச்........................... உங்களையே தீட்டுப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
3. கையில் பிடிப்பதற்காகவே அவ்வாள்........................ வைக்கப்பட்டுள்ளது.
5. நான் என் பெருஞ்சினத்தை உனக்கு ........................ திருப்புவேன்.
7. உன் நடத்தைக்கு........................ உன் செயல்களுக்கு ஏற்பவும் நீ தீர்ப்பிடப்படுவாய்.
8. அழகிய மகுடங்களை அவர்கள் தலையில் ..............கள்.
10. இது வேறிடத்தில் நடப் ..........................செழிக்குமா?.
11. நான் தூயவர் என்பது உங்கள் ........................ வேற்றினத்தார்க்கு வெளிப்படும்.
12. எனக்கெதிராக நீங்கள் இழைத்த........................ அனைத்தையும் விட்டு விடுங்கள் (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)

## மேலிருந்து கீழ்

1. பாலை நிலத்திலேயே என் ஆத்திரத்தை அவர்கள் மேல் கொட்டி என் ........................த் தீர்த்துக் கொள்வேன்.
2. முழங்கால்களெல்லாம் ........................ அலம்பும்.
4. கொடுத்ததற்கு மேலாய்ப் ........................அடுத்திருப்பவனை ஒடுக்குகிறாய்.
6. அது .................... தாழ்ந்து படரும் திராட்சைக் கொடியாயிற்று.
8. களிம்பு காய்ந்து உருகும் வரை அது.................... (3ம் 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
9. பிள்ளைகளின் ........................என்னுடையதே.
12 வேற்றினத்தார் அதனைப்பற்றி கேள்வியுற்று அதனைப் படு.................... வீழ்த்தினர்.
13. அவர்களது குற்றம் மறைக்கப்படாமல் அவர்கள் ........................ பிடிக்கப்படுவர்.

## வலமிருந்து இடம்

2. ஏனெனில் என் ........................ அவர்கள் ஒதுக்கி விட்டனர்.
4. நீ படைக்கப்பட்ட ஊரில் நீ.................... மண்ணில் நான் உன்னைத் தீர்ப்பிடுவேன்.
6. ஒவ்வொரு........................அதிலிருந்து எடு.
9. பெற்றோரின் ........................ என்னுடையது.
14. ........................ யெல்லாம் உன்முகம் திருப்பப்படுகிறதோ அங்கெல்லாம் காட்டு.
16 அதன் கிளைகளின் ....................களில் அவை வந்து தங்கும்.
17. என்........................ ஒதுக்கி விட்டார்கள்.
18. அது சினத்தோடு பிடுங்கப்பட்டு .................... எறியப்பட்டது.

## கீழிருந்து மேல்

8. அவர்களைச் ............வரும் படுகொலைக்கான வாள் அது.
11. நெருப்பு........................ இறைச்சியை நன்கு வேகவை.
12. தந்தையின் ........................ மகன் ஏன் சுமக்கக் கூடாது.
14. அது உன்னிலிருக்கும் எல்லாப் பச்சை மரங்களையும் பட்டமரங்களையும் ........................விடும். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
15. மின்னலென ஒளிர்வதற்கென அது ........................ப் பட்டுள்ளது. (குழம்பியுள்ளது)
16. உங்கள் மனத்தில் எழும் எண்ணம் ........................ப் போவதே இல்லை.
17. செழிப்பு ....................இது நடப்பட்டது. (3ம், 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
18. நேரியவர் தம் நேரிய நடத்தையினின்று விலகி................ பொல்லாரைப் போல வெறுக்கத் தக்கவற்றையெல்லாம் செய்தால் அவர்கள் வாழ்வரோ.

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 94ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

*முதலாம் பரிசு:*

**க. சஞ்ஜை**
புத்திரகண்டான்,
மாவிலங்கேணி, முருங்கன்.

*இரண்டாம் பரிசு:*
**டோனியஸ் சுபாஜினி**
அருப்பே சிறுமியர் இல்லம்,
பூவரசன்குளம், வவுனியா.

*மூன்றாம் பரிசு:*
**ந. நியூட்டன்**
தரம்-09,
கீரி, மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 119பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 107 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 94ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. செ. கனிஸ்ரன், Room-No-T-57, புனர்வாழ்வு மையம், ஓமந்தை.
2. நா. மரிய கொறற்றி, இல 100/45, சாந்திபுரம், மன்னார்.
3. தி. லக்சிக்கா, அலங்குளம், வட்டக்கண்டல்.
4. குயின் மேரி தோமஸ், அ.கா.நவசன்னியாச மடம், கம்பஹா.
5. அ.மேரி கொண்செப்ரா, மடுக்கோவில், மடு.
6. அ. பிரியா, கற்கிடந்தகுளம், முருங்கன்.
7. செ. பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
8. அ. ஸ்டெலா, இல.51, துட்டுவாகை, நேரியகுளம்.
9. செ. மேரிநிலோஜா, கன்னாட்டி, அடம்பன், மன்னார்.
10. எஸ். நித்தியா, கொன்னையன்குடியிருப்பு, தாராபுரம்.
11. செ. அன்ரனி தனுராஜ், சென் மேரிஸ் றோட், அடம்பன்.
12. ஞா டயானி அளவக்கை, முருங்கன்.
13. ம. அஸ்ரா இவானி, பிள்ளையார் பிட்டி, ஆண்டான்குளம்.
14. தி. றிச்மன், சென் மேரிஸ் றோட், அடம்பன்.
15. இ. ஒலின்ரா, நல்லாயன் கன்னியர் மடம், பூவரசங்குளம்.
16. ஜெ. பிரஷ்லா, பம்பைமடுப்பங்கு, வேப்பங்குளம், வவுனியா.
17. வ.சு. லைக்சனா, மணற்குளம், உயிலங்குளம்.
18. அருட்சகோதரி பவித்ரா, கார்மேல் மடம், கொழும்பு – 10.
19. செ. மேரி றெஜினா, கங்காணிதீவு, நானாட்டான்.
20. ஜெ. ஸ்ரெலா முறாயஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
21. ஜே. திரேசா குருஸ், சேப்கா வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
22. மே.பி.றோ. கிறஸ்ரோபா, 18,கோவில வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
23. என். டயானா, பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
24. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
25. செ. மேரிஜெசிலடா, மடுக்கோவில், மடு.
26. எஸ். நிஷாந்தினி சுஜிரு, 8ம் வட்டாரம், பேசாலை.
27. ஜெ. ஜெயந்திமாலா, கல்நாட்டி, முருங்கன்.
28. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
29. ச. டிஜோன்சிக்கா பீரிஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
30. ரா.சுமி, கற்கிடந்தகுளம், முருங்கன்.
31. மி. மேலின் யூட், வலயம் - 01, புனர்வாழ்வு நிலையம், பம்பைமடு.
32. அகுஸ்தீன் இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
33. வசந்தி பேரின்பநாயகம், "வசந்தம்", ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
34. எஸ். ஜொய்ரன் வாஸ், தரம் - 09, தலைமன்னார் பியர்.
35. சே. நிஷாந்தினி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
36. ஜெ. ஜெயறிவேதன் லெம்பேட், 5ம் வட்டாரம், வங்காலை.
37. ஆ. ஜோச் வக்கரன், பறப்பாங்கண்டல், பெரியகுளம், மன்னார்.
38. ஜேசுதாசன் அன்ரனிதாஸ் குருஸ், சேப்கா வீதி, தாழ்வுபாடு.
39. கிறிஸ்ரி பிரியங்கா தீனு, 5ம் வட்டாரம், பேசாலை.
40. ஆ. லக்சி, மாதிரிக் கிராமம், நறுவிலிக்குளம், வங்காலை.
41. எஸ். மேவின், பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
42. க. தர்சினி, எமில் நகர், மன்னார்.
43. குளோறியஸ் பற்றிக், பிரதான வீதி, சின்னக்கடை, மன்னார்.
44. பி. அ. குருஸ் சரன்சலா மேரி, அருளாளர் அன்னை தெரேசா ஆலயம், துட்டுவாகை.
45. வ. சியாமளன், மணற்குளம், உயிலங்குளம்.
46. மி. ஜான்சி, ஆட்காட்டிவெளி, ஆண்டாங்குளம்.
47. சே. நிரோஷினி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
48. அன்ரனி அஜித்தா, பாஷையூர், யாழ்ப்பாணம்.
49. பி. முத்துப்பிள்ளை, கங்காணிதீவு, நானாட்டான்.
50. பி. ஜெனபந்துர் பெனான்டோ, தரம் 11, முள்ளிக்குளம்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 94 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பு[1] | கு | ந் | து | ❋ | ள் | க | கை | க் | ற | இ[2] |
| ய | சு[3] | ரு | ளோ | ட் | டை | ளை | க | ற் | சொ[4] | ரை |
| ற் | ம | ளை | க | றி | நே[5] | ற் | றி | யை | ❋ | ச் |
| கா | த் | ❋ | ளா | ளி[6] | ரு | சொ[7] | சி | ட் | கா[8] | ச |
| ற் | து | ன் | ரு | வ | ங் | ல் | தோ[9] | லை | யி | ல் |
| று | வே | தி | பொ[10] | ர் | கி | லு | ❋ | சு[11] | வ | ரை |
| ளை | ன் | த் | பி | ரு | தி[12] | ம் | யு | றி | ள | க[13] |
| க | வே | ற | ❋ | ❋ | ற | க | க் | டி | கு[14] | தி |
| ர் | சு | ற் | கி | நோ[15] | க் | க் | வா[16] | கை | க் | ர |
| வ | பே[17] | மு[18] | த் | தை | க | ர | ல் | ளா | வா[19] | வ |
| அ[20] | ❋ | ல் | ச | ச் | ரை | இ[21] | ற | க் | கை | ணை |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.95ற்கான முடிவுகளை 2010ம் ஆண்டு ஜூலை மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# முதுமை, முடிவல்ல!
# அது மகிழ்வின் முதிர்ச்சியே!

ப. லோ. இ. ஆனந்தராசா (மகிழ்மன்னன்) 'ஜெயா' வாசம் பார்மேனி வீதி, கீரி, மன்னார்.

முதிர்வு என்றதும் அநேகருக்கு ஒரு மன அதிர்வு ஏற்படுகிறது. பிறந்தவன் இறந்தே ஆக வேண்டும். இறப்புக்கு வயதில்லை. ஆனால் எமது நவநாகரீக (செயற்கைமுறை) வாழ்வால் எம்மில் பலர் முதிர் வயதை எட்டுவதில்லை. அநேகருக்கு வழங்கப்படாத ஓர் அற்புதக் கொடையே முதுமை. இறப்பு – உடல்ரீதியானதே தவிர அது முடிவல்ல. அங்கேதான் தொடங்குகிறது "நித்திய வாழ்வு". எமது தலைவன், குரு இயேசுவும் ஒரு தாய் வயிற்றில் கருவாகி, உருவாகி, வளர்ந்து, மனிதனாகி எளிய சாவான சிலுவைப் பாடுகளை மனமுவந்து ஏற்று, பல சோதனைகளுக்குள்ளாகி மரித்து சாதனையாளனாக கல்லறையிலிருந்து மீளவும் அழியாநிலை உயிர்ப்பினை பெற்று மேலுலகம் ஏறிச்சென்றார். இது சரித்திரம், உண்மை. அவர் சொன்னபடி இன்றும் தேவநற்கருணையில் உயிருள்ள இரத்தமும், சதையுமாக பலருக்கு உணவாக மாறியதை அறிவுபூர்வமாக காண்கிறோம். இது (சத்திய) உண்மையும் கூட. தென்கொரியாவில் நாஜு எனுமிடத்தில், ஒருபெண் ஜுலியாவுக்கு தேவநற்கருணை, திருக்காயங்கள் வழியாக இயேசு தம்மை உயிருள்ள இரத்தமும், சதையுமாக வெளிப்படுத்தி, எமக்கு (மேலும்) விசுவாசத்தை உறுதிப்படுத்திவருகிறார். இந்த இரத்தமும், தசையும், உயிருள்ள ஒரு வாலிபனினதே என விஞ்ஞானரீதியில் வைத்தியர்களால் பரிசோதித்து நிரூபணமாயிற்று. எம் ஆண்டவர் இயேசு இன்றும் இளமையாய் (எம்மோடு) வாழ்கிறார் என்பதே இதன் பொருள். எமக்குப் பரிசாக, ஒரு மகிழ்வான நிறைவாழ்வு ஆயத்தப்படுத்தவே இயேசு விண்ணகம் சென்றார் என்பது திருச்சபையின் படிப்பினை. எமக்கு தமது அன்பை தொடர்ந்தும் காட்சிகளுடாக (திருமுகம், திருவுடல், திரு இரத்தம்) வெளிப்படுத்தி நாமும் பிரதிபலனாக ஒவ்வொரு அயலானையும் அன்பு (தியாக) செய்யும்படி விரும்புகிறார்.

எனவேதான் முதுமை என்று எவரும் ஒதுங்கிவிடாது "நானும் இளைஞனே, என்னிலும் உயிருள்ள வாலிப இயேசுவின் இரத்தம் ஓடுகிறதே" என மனமகிழ்வுடன் உங்களது உள்ளத்தையும், உள்ளதையும் அனுபவ சாட்சிகளாய், பிறருடன் பகிர்ந்து, பூரிப்புடன் வாழுங்கள்! வாழ வாருங்கள்! என அழைப்பு விடுக்கிறேன். நேரம் பொன்னானதுதான். அன்பிய வாழ்வு, ஆவலாதி அவதூறு நிறைந்தது; வேலையற்றவர்கட்குரியது என ஒதுங்கிடாது செபிக்கவும் பிறர் அன்புப் பணிகள் புரியவும், தக்க ஆலோசனை கொடுத்துதவுங்கள் என வேண்டுகிறேன். பழுத்த கனிமரத்திற்கு கல்லெறி விழுவது பெருமையே! இழிவெனக் கருதிய சிலுவைதான் மீட்பின் வெற்றிச் சின்னமாயிற்று. இயேசுவின் சீடர் நாம் (கத்தோலிக்கர்). துன்பம், சகிப்பு ஊடாகவே விடிவு, மீட்பு கிடைக்கும். வீட்டிலே பிள்ளை குட்டிகளோடு, கூட்டாக இணைந்து வாழும் உங்களுக்கு – தொல்லைகள், இடறல்கள் வரலாம். சும்மா இருப்பது சுகமா? இல்லை! மனதை ஒருநிலைப்படுத்தி பிறருக்காய் செபிப்பதும், இயன்றவரை சிறுநடைபோட்டு அயலவரின் சுக நலன் விசாரித்து ஆறுதலளிப்பதும் மனிதநேயம். எம் உடலுக்கும் நல்லது. மறுவாழ்வின் புண்ணியமுமாகும். பெறுவதிலும் கொடுப்பதே சிறந்தது. நடந்து முடிந்த தேர்தல்களை மீளாய்வு செய்தால்.... பல எலி கூடினால் புத்தெடுக்காது என்பது நிரூபணமாகிவிட்டது. இதில் எமக்கும் பங்குண்டல்லவா? இறுதி தீர்ப்பு நாளில் இயேசு கணக்குக் கேட்பார். நல்லத்தைச் சொன்னாயா? செய்தாயா? ஏன் நான் உன்னிடம் கொடுத்த கொடைகளை நீ பகிரவில்லை? என்பாரே. அன்பர்களே! புண்படா உடம்பும், கறைபடா மனமும், பொய்படா ஒழுக்கமும் எம் சமுதாயத்திற்குத் தேவை. இதை மறவாதீர். இறைவனிடம் இரஞ்சிக் கேட்போம். எமக்கு நலமானதை நிச்சயம் இயேசு தருவார்.

அயலவன் குரலுக்கு செவிமடுப்போம்! அவர்களை தாங்கிநிற்போம். உள்ளதை அவர்களோடு பகிர்வோம். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனும் மனப்பாங்குடன். பங்குகளில் பணியாற்றிட, அனுபவத்தில் முதிர்ச்சியுற்ற நீர் மற்றவரும் பயனடைய கற்றதை, பட்டறிவை பகிர்ந்திட முன்வாரீர். "தீமை செய்யாதே"! என்பதிலும் பார்க்க – "நன்மை செய்ய மறவாதே" என்பது சிறந்த பெறுமதியல்லவா! தயங்காதே மனமே தனயன் இயேசு உம்மோடிருக்கிறார். நாளை "வெற்றியின் பரிசு" உனக்காக காத்திருக்கிறது.

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 07 1952



உதிர்வு 04 06 2009

### அமரர் அ. அன்னப்பு சோசை

மண்ணக வாழ்வு
நிலையற்ற தெனினும்
அன்னையே உம் பிரிவு
அளப்பெரியதன்றோ
கண்ணின் இமைபோல
அருகிருந்தரவணைத்து
எந்நாளும் எமைக்காத்த
எம் அன்புத்தாயே
இன்னும் பல ஆண்டு
வாழ்வீர்களென்றே
எண்ணியே உளமதில்
உவகை பூத்திருந்தோமே
மண்ணுலகைத் துறந்து
விண்ணகம் சென்று
இன்றுடன் ஆண்டும்
ஒன்றானதம்மா
பரிசுத்தராம் இறைவன்
உமை ஏற்றுக் கொள்ள
எந்நாளும் அவர் பதம்
இறைஞ்சியே அஞ்சலித்தோம்

**பிரிவால் துயருறும்**

அம்மா, கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
சகோதரர்கள், உறவினர்கள், (தாழ்வுபாடு.)

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 03 1983



உதிர்வு 17 06 2007

### அ. நேசராஜா பெரேரா

(நொச்சிக்குளம், உயிலங்குளம்)

மூன்றாண்டு உதிர்ந்ததோ உன் முகத்தை பிரிந்து
வையகத்தில் வசந்தமாய்
எம்மனைவருக்கும் வசந்தனாய்
வாழ்வை வசந்தமாக்கி
வாழ்ந்து வந்த வசந்தனே
இறைவனோடு இரண்டற கலந்த எம் அன்பே
எம் மனதில் என்றும் நீங்காமல் வாழ்ந்து வருகின்றாய்
காலங்கள் மறைந்தாலும் எம் மனக்காயம் மாறுமோ
கண்ணீரோடு வேண்டுகின்றோம்
இறைவா நித்திய இளைப்பாற்றியை நிலையாக அளித்திடுவீர்.

பிரிவால் துயருறும்

அம்மா, அப்பா, சகோதரர்கள், உற்றார் உறவினர்கள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி / 8ம் ஆண்டு நினைவஞ்சலி





மலர்வு 17-07-1927 உதிர்வு 12-06-2008

மலர்வு 12-06-1933 உதிர்வு 30-04-2002

### திரு. டெனிஸ் அந்தோனிப்பிள்ளை

### திருமதி. செபஸ்ரியம்மா அந்தோனிப்பிள்ளை

(முருங்கன் பிட்டி, முருங்கன்)

*"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே!*
*மரணத்தில் என்னை மறவாதீர்கள்"*

அப்பா அம்மா நீங்கள் மரித்து விடவில்லை. அன்னை மரி தாள்களில் அர்ப்பணப்பூவானீர்கள். உங்கள் ஆத்ம சாந்திக்காய் இருகரம் நீட்டி இறைவனை இறைஞ்சி, கனடா, பிரான்ஸ், கல்முனை, கண்டி ஆகிய இடங்களில் இரங்கல் திருப்பலி நடைபெறும். முக்கியமாக முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 12.06.2010 அன்று காலை 6.30க்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர்களின் பிரிவால் துயருறும், பிள்ளைகள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 03 1959



உதிர்வு 05 06 2008

### அமரர் பிரகாசம் இராஜேந்திரா

(நானாட்டான்)

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"*

ஆண்டு இரண்டு ஆகியது - ஐயா உமை இழந்து
உடலால் எம்மைப் பிரிந்தாலும்
உள்ளத்தாலும் உணர்வுகளாலும்
என்றுமே எம்முடன் வாழ்கிறீர்கள்
என்றும் எங்கள் நெஞ்சமதில்
உம் நினைவு நீங்கவில்லை
ஆண்டவர் ஆசிகளை - என்றும்
உமக்கருள வேண்டுதல்கள் செய்கின்றோம்
ஆன்மா அமைதி பெற

பிரிவால் துயருறும்: பாசமிகு மனைவி, உடன் பிறப்புக்கள், மாமா, மாமி, உற்றார் உறவினர்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 02 03 1937



உதிர்வு 11 04 2010

### ச. சூசையப்பு பீரிஸ்

(இளைப்பாறிய கிராம அலுவலர்)

*"ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை"*
*(தி. பா. 23:1)*

அன்பு எனும் விதை விதைத்து
அறிவு என்னும் நீர் வார்த்து
பாசம் என்னும் பயிர் வளர்த்து
குடும்பம் என்னும் பசுஞ்சோலையில்
மகிழ்வுடன் எமை வாழ வைத்த ஐயா!
குன்றின் மேலிட்ட தீபமாய் நாம் வாழ
நின் உயிர் உடல் தனை எமக்காய் தாரை வார்த்து
இறைவனின் இரக்கத்தில் இளைப்பாறச் சென்றனையோ!
வல்லபரன் யேசுவோடு நின் ஆன்மா சங்கமிக்க
ஒன்று பட்டு வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## 44 வது உலக தொடர்பாடல் தினம்.....

1ம் பக்க தொடர்ச்சி..........

அவர் மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாக மாட்டார். ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிற எவரும் மீட்பு பெறுவர். ஆனால் அவர் மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவார்கள், தாங்கள் கேள்வியுறாத ஒருவர் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள், அறிவிக்கப்படாத ஒன்று பற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள், அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள். (உரோ 10: 11, 13-15) புனித பவுலடிகளார் முன்வைத்த சவால்களுக்கு மிகவும் விசேடமான விதத்தில் பதில் தரக்கூடிய உயர்ந்த மதிப்புள்ள பணியாக குருத்துவப்பணி விளங்குகின்றது.

குருக்கள் குறிப்பிட்ட சமூகத்தலைவர் என்ற அடிப்படையில் அவர்களுடைய பணியை திறம்படச்செய்ய டிஜிரல் சந்தையில் காணப்படும் பல்வேறுபட்ட முறைகளை பாவித்து டிஜிரல் தொடர்பாடல் உலகத்திலே நற்செய்திக்கு சான்று பகருமாறு நல்ல, விசுவாசமான ஊழியர்களாக விளங்க அழைக்கப்படுகின்றனர். எனவே குருக்கள் பாரம்பரிய முறைகளை பயன்படுத்தும் அதேவேளை ஒளி,ஒலி சேர்ந்த வளங்களை பாவித்து (படங்கள், வீடியோ, இணையத்தளங்கள்) மறைத்தூதுப் பணியாற்றும் ஒரு புதிய சவாலுக்கு உள்ளாகின்றனர். இந்நிலையானது பரந்த புதிய கண்ணோட்டத்தில் மறை பணி, மறைதூதுப்பணி, மறைக்கல்வி மற்றும் கலந்துரையாடல்களை பார்க்க வழி சமைக்கின்றது. நவீன தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் துணைகொண்டு குருக்கள் எம்மோடு வாழ்பவர்களுக்கு கிறிஸ்துவின் முகத்தை கண்டுணர உதவி செய்யமுடியும். குருத்துவ பயிற்சிக்காலத்திலேயே இவற்றைப்பற்றி கற்பதனூடாக இந்நோக்கத்தை மிகவும் துல்லியமாகவும் திறமையாகவும் அடையக்கூடியதாக இருக்கும். உலக டிஜிரல் தொடர்பாடலிலே ஈடுபடும் குருக்கள் ஊடகத்துறையின் மாயையின் கவனத்தை ஈர்ந்தவர்கள் இல்லாமல் அவர்களின் குருத்துவ இதயம் இயேசுவினுடைய நெருங்கிய தொடர்பாடலிலேயே கவனம் செலுத்துவதாக இருக்கவேண்டும். இந்த டிஜிரல் உலகிலே எங்களுடைய மறைதூதுப்பணியானது கடவுள் அருகில் இருக்கிறார்: கிறிஸ்துவில் நாம் எல்லோரும் ஒருவர் ஒருவரைச்சார்ந்தவர்கள் என்பதைக்காட்ட வேண்டும். ஏனெனில் இதுபற்றிய உண்மையற்ற தன்மையிலும் குழப்பத்திலும் பல மக்கள் இக்கால கட்டத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கடவுளின் மனிதன் எனப்படுபவர் குருவானவர். அவரது தற்கால டிஜிரல் தொழில் நுட்ப ஆற்றலினால் இன்றைய உலகில் கடவுளை எளிதில் உணரக்கூடியதாக மறைபரப்ப முடியும். பெறுமதி வாய்ந்த கடந்த கால சமயம் சார்ந்த ஞானத்தினை வழங்க முடியும். இத்தயை ஆற்றல்கள் கொண்டவர் குருவானவர் ஒருவரன்றி வேறுயார் இருக்க முடியும்? என்னுடைய கடந்த வருட செய்தியிலே இத்தொடர்பாடல் உலகிலே உள்ள தலைவர்களை மனித மாண்பிற்கும் மதிப்பீட்டிற்கும் மதிப்புக்கொடுக்கும் கலாசாரத்தை மேம்படுத்த ஊக்கப்படுத்தினேன். டிஜிரல் கண்டத்திலே கலாசாரத்திற்கான சேவையை செயற்படுத்த திருச்சபையானது இவ்வழியாகவும் அழைக்கப்பட்டுள்ளது. நற்செய்தியை எமது கரங்களிலும் இதயத்திலும் வைத்திருப்பதோடு நாம் இறைவார்த்தைக்கு அழைத்துச்செல்லும் வழிகளுக்கான தொடர்ச்சியான தேவையை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும். நாடிச்செல்லப்பட வேண்டியவர்கள் மட்டில் கருத்துடன் கவனம் செலுத்தும் அதே வேளை நற்செய்தி அறிவிப்பின் முதற்படியாக நாம் அவர்களின் நாட்டத்தை ஊக்கப்படுத்த வேண்டும். இந்த டிஜிரல் தொடர்பாடல் உலகிலே மேய்ப்புப்பணி பிரசன்னமானது ஏனைய மதங்களை பின்பற்றுபவர்கள், நம்பிக்கையில்லாதவர்கள், மனமுடைந்தவர்கள் மற்றும் தாம் அறிந்த உண்மையை சொல்லத்தெரியாமல் இருப்பவர்கள் ஆகியோருக்கு அண்மித்ததாக இருக்கவேண்டும். எவ்வாறு எசாயா, செபவீடு எல்லா மக்களுக்கும் என்று எதிர்வு கூர்ந்தாரோ, ஜெருசலேம் தேவாலயத்தில் புறவினத்தாருக்கான பகுதி இருந்தது போல இணையத்தளமானது கடவுளை இன்னும் தெரியாதவர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குவதாக நாங்கள் ஏன் கருத முடியாது. குருக்களுக்கு நவீன ஊடகங்களானது பரந்த நற்செய்திப்பணிக்கான வாய்ப்புக்களை வழங்குவதோடு திருச்சபையின் பொதுவான பணியை உள்ளடக்குவதற்கு உற்சாகப்படுத்துவதோடு பரந்த உண்மையான தோழமையையும் கட்டியெழுப்புகிறது. கிறிஸ்துவை செபத்திலே சந்திப்பதாலும் செவிமடுப்பதாலும் அவரை போதிப்பதாலும் வாழ்விலே சாட்சி பகர்வதனாலும் அருட்சாதனங்களை அன்புடன் கொண்டாடுவதனாலும் விசேடமாக திருப்பலி மற்றும் ஒப்புரவு ஆகிய திருவருட்சாதனங்களை நிறைவேற்றுவதனூடாக பெறுகின்ற இறுதியான நற்பயன் இறைமகனிடமிருந்தே வருகின்றது என்பதை குருக்கள் எப்போதும் தம்மனதில் கொண்டிருக்க வேண்டும்.

அன்பார்ந்த சகோதர குருக்களே! நவீன தொடர்பாடல்கள் வழங்கும் அதற்கே உரித்தான சாத்தியப்பாடுகளை நுன்மதியுடன் பாவிக்க மீண்டும் அழைக்கிறேன். நடைமுறை ஊடகங்கள் திறந்து விடும் புதிய வடிவங்களை பயன்படுத்தி உற்சாகமுடைய நற்செய்தி அறிவிப்பாளர்களாக திகழ ஆண்டவர் உங்களை அழைக்கிறார். இந்த நம்பிக்கையோடு தேவதாயினதும் ஜோன் மேரி வியானியினதும் பராமரிப்பை உங்களுக்கு வழங்கிவதோடு என்னுடைய அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தையும் வழங்குகின்றேன்..

மன்னா

# சிறுவர் பொழிவு

## விவிலிய சிறுகதை

### யோசேப்பும் அவனது அழகான அங்கியும்

(தொ.நூ37:1-4, 12-14, 31-33)

யோசேப்பு தன் தந்தையாகிய யாக்கோபுடனும், தன் சகோதரருடனும் கானான் தேசத்திலே வாழ்ந்தான். யோசேப்பிற்கு பத்துச் சகோதரரும், பென்ஜமீன் என்னும் இளைய சகோதரனும் இருந்தார்கள்.

யோசேப்பு தனது குடும்பத்திற்கு மிகவும் உதவியாயிருந்தான். அவன் இளமையான பதினேழு வயதிலே தன் சகோதரருடனே செம்மறியாடுகளையும், ஆடுகளையும் பொறுப்பாக மேய்த்துக் கொண்டிருந்தான். அவனது சகோதரர் நேர்மையற்ற வேலைகளை செய்தார்கள். யோசேப்பு அவர்களுடைய தீச் செயல்களை தன் தந்தைக்கு சொல்லுவான்.

யாக்கோபு, தன் முதிர் வயதிலே யோசேப்பு தனக்கு பிறந்ததினால், தன் பிள்ளைகள் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்தார். யோசேப்பு கடவுளுக்கு பயந்த ஒரு இளைஞனாக அன்புடன் தனது குடும்பத்திற்கு வேலை செய்தான். யாக்கோபு அவனுக்கு ஒரு நீண்ட கை நீளமுள்ள அங்கியை செய்வித்தார். அது பலவர்ணங்களிலாளான அழகு வேலைப்பாடு நிறைந்த அங்கியாக இருந்தது. அவனுடைய சகோதரர் எல்லாரிலும் அவனைத் தங்கள் தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர் கண்டபோது பொறாமை கொண்டு அவனைப் பகைத்தார்கள்.

அவன் சகோதரர் அவனுக்கு எதிராக சதியாலோசனை செய்தார்கள். ஒருநாள் சகோதரரை மேற்பார்வை செய்ய தகப்பன் யோசேப்பை அனுப்பிய போது அவர்கள் அவனைப் பிடித்து எகிப்து தேசத்திற்கு பயணம் போகிற வியாபாரிகளிடம் இருபது வெள்ளிக்காசிற்கு அவனை விற்றுப்போட்டார்கள். அவர்கள் யோசேப்பின் அங்கியை எடுத்து ஒரு வெள்ளாட்டுக் கிடாயை கொன்று, அதை இரத்தத்தில் தோய்த்து, வீட்டுக்குப் போய் தங்கள் தந்தையிடம் அதனை காண்பித்தார்கள். யாக்கோபு அதை யோசேப்புடையதெனக் கண்டு "ஒரு காட்டு மிருகம் எனது மகனை கொன்றது" என்று எண்ணி தன் மகனுக்காக நீண்ட நாட்களாக துக்கம் கொண்டாடினார்.

படிப்பினை : கடவுளுடைய பிள்ளைகள் பாவத்துள் வீழ்ந்து அவரை விட்டு தூர விலகிச் செல்லும் போது கடவுள் இவ்வாறே துக்கமடைகிறார்.


மேலே தரப்பட்டுள்ள கதையை வாசித்து கீழே தரப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளியுங்கள்.

1. யோசேப்பிற்கு பென்ஜமீனுடன் எத்தனை சகோதரர்கள் இருந்தார்கள்?
2. யோசேப்பு 17 வயதில் என்ன செய்தான்?
3. யாக்கோபு தன் மகனைக் குறித்து துக்கமாக இருந்தது ஏன்?
4.யோசேப்பை எகிப்திய வியாபாரிகளுக்கு விற்றுப் போட்டது யார்?
5. யோசேப்பின் சகோதரர்கள் அவனை வெறுத்தது ஏன்?

பாலகரே! உங்கள் கைவண்ணத்தை இங்கே காட்டுங்கள்



சிறுகதைக்கு பொருத்தமான இப் படத்தை உங்கள் கலைநயத்திற்கேற்ப நிறந்தீட்டி மகிழுங்கள்




## சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்

சிறுவர் பொழிவில் பிரசுரமான நிறமற்ற படத்திற்கு கலைநயத்தோடு நிறந்தீட்டி அனுப்பியவர்

அ. வேஜின் நிலானி
ஆவணம்,
நானாட்டான்.

# கவிதைப் பூக்கள்


## எங்கே சென்றாய்?




தாயின் அன்பாய் நீயிருந்தாய்
மனம் சோரும் பொழுது – என்
நம்பிக்கையாய் நீ இருந்தாய்
பசி எடுத்த போதெல்லாம்
நிறையுணவை நீயளித்தாய்
பதவியும் புகழும் வரும் என்று – பல
புகழுரை நீ உரைத்தாய்
ஒவ்வொரு இடத்திலும்
ஒன்றாய் நாமிருந்தோம்
செல்லுமிடமெல்லாம் ஒன்றாக நாம் சென்றோம்
சாயும் போது மட்டும் - ஏன் என்னை
தனியாக புலம்பவிட்டு நீ மட்டும்
நிம்மதியாக எங்கே சென்றாய?

ஆசீர்வாதப்பர் - நவீன்.

## நினைவுகள்





உயிர் இருந்தது – உடன்
உறவும் இருந்தது
குருதி சொட்டச் சொட்ட
மழலையை எம்மிடம் - அவர்
கரம் தாங்கி வரும் போது

அரும் பணியாற்றும் வைத்தியர்
இறைவனின் சாயலில்
நிறை பணியாற்றி நின்றார்
ஓய்வுறக்கம் இன்றி
உயிர் காப்பில் நிறைந்தார்
அன்றைய பொழுதும்
அவலமாய்த்தான் விடிந்தது

உயிர் தரும் காற்றிடை தான்
உரசி வந்தது அது
உயிர்காப்புப் பணியிடம்
உருக்குலைந்து போனது
சுவரெங்கும் சிவப்புக்கள்
நிலமெங்கும் சடலங்கள்
கடவுளாய் நின்றவரும்
சடலமாய் கிடந்தார்
காயம் பட்டு வந்தவரும்
சிதைந்து போய்க் கிடந்தனர்

என் கரம் கிடந்த
மழலையுடன் விழுந்தெழுந்தேன்
கரும்புகை மறைவதற்குள்
எதை நினைத்தானோ
புன் சிரித்தான் - மறுகணம்
ஆறாத துயர் தந்து
மறைந்து போய் விட்டானே.

யூலியஸ், தோலகட்டி

## கொஞ்சம் சிரிங்க

தவளை நண்பர் : "என் பையனுக்கு பிரான்ஸ்ல ரெண்டு கடை சொந்தமா இருக்கு"
மற்ற தவளை : "என்ன கடை?"
தவளை நண்பர் : "வேறென்ன கடை சாக்கடைதான்"

கார் ஓட்டுபவர் : "உடனே ஆட்டோவை எடுப்பா...."
ஆட்டோ ஓட்டுபவர் : "எங்கே சார் போகணும்"
ஆஸ்பத்திரிக்கா.... அல்லது முத்தரிப்புக்கா?"
கார் ஓட்டுபவர் : "அட நீ வேற என் கார் முன்னால நிறுத்தி இருக்கிற உன் ஆட்டோவை எடுய்யா....."

## துளிப்பா

சேற்று நிலத்தில் தாழ்ந்து வாழும் மண்புழுவை விட
தீபச்சுடரில் வீழ்ந்து மூழும் விட்டில் மேலானது

சிவப்பு மனிதனுக்கும் நிழல் கறுப்புதான்
கறுப்பு மனிதனுக்கும் இரத்தம் சிவப்புதான்
வண்ணங்களில் அல்ல மனித வாழ்க்கை எண்ணங்களில்

சத்தியம் என்பது சோதனை அதை சாதிப்பதே சாதனை

குடிசையில் வாழ்ந்தாலும் இலட்சியத்துடன் வாழ்ந்திடு

கவலை அற்ற எதிர்காலத்திற்கு கல்வியே நிகழ்காலம்

ஞா. அகில்ராஜ், தரம் 10
புனித வளனார் மாணவர் இல்லம், மன்னார்.









சமூக தொடர்பு அருட்பணி மையத்தின் உலக தொடர்பாடல் தின விழாவின் நிழற்பட பதிவுகள் சில

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் பிரதான வீதி 17ம் இலக்கத்திலுள்ள கறிற்றாஸ் – வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.